# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

பிப்ரவரி 2010 ஜீவியம் 15 மலர் 10

இம்மாத மலரில்....

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சாவித்ரி | 2 |
| லைப் டிவைன் | 4 |
| இம்மாதச் செய்தி | 18 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 19 |
| பாரம்பரிய ஆன்மீகமும் அன்னை மற்றும் பகவான் கண்ட புதிய ஆன்மீகமும் | 30 |
| அஜெண்டா | 38 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 41 |
| அன்பர் கடிதம் | 46 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 48 |
| ஜாதிமல்லி | 55 |
| லைப் டிவைன் - கருத்து | 61 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 64 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

உரிமையைப் பிறருக்கு அளித்துக் காத்திருப்பது இறைவனின் பொறுமை.

எது தடையென அறிவது ஞானம். அதுவே உண்மை எனப்படும். அறிந்த நேரம் தடை விலகி பலன் தரும்.

தேடிப் போவது நாடி வருவது காலம் இடத்தை கடந்த பண்பு.

ஊனக்கண்ணிற்கு தெரியா-ததை ஞானக்கண் பார்க்கும். அந்த ஞானக் கண்ணிற்கும் தெரியாததை ஊனக்கண்-ணிற்குக் காட்ட சொல்பவன் மனிதன்.

கொடுத்தவன் எடுத்தும் போவான். ஆனால் அருள் கொடுத்ததை எடுத்துப் போவதில்லை.

## P.109 A dream of beauty dances through the heart

### அழகெனும் கனவு ஆடும் அரங்கமென்ற இதயம்

- ✡ பிரபஞ்ச மனத்தின் எண்ணம் அருகே வந்தது
- ✡ காணாத இடத்தினின்று காதில் ஒலிக்கும் செய்தி
- ✡ அனந்த உறக்கம் விழித்தெழுந்து இறங்கி வந்தது
- ✡ இதுவரையறியாத பிரம்மத்தின் சின்னங்கள்
- ✡ ஜடமான தசை உள்ள சொரணையையிழந்தது
- ✡ புனிதமான காளியின் ஆட்டம் ஆடி ஓய்ந்தது
- ✡ பாசத்தின் வேகமும், சக்தியின் அலைகளும்
- ✡ பளபளக்கும் ரூபம் நம்மை விட்டகன்றது
- ✡ ஆச்சரியமான பூமாதேவி, சிகரமான கற்பனை
- ✡ பிரவாகமாக வந்ததின் பிசிறு
- ✡ பூமாதேவியின் அரைப்பார்வை, அவள் சக்தியின் குறையான சிருஷ்டி
- ✡ அவள் உயர்ந்த சித்திரம், சொர்க்கத்தின் படத்தைப் பார்த்து வரைந்தது
- ✡ பொன்னான முறையின் பொலிவான பிரகாசம்
- ✡ உற்சாகமான கருவியின் சிறப்பான சிற்பம்
- ✡ உள்ளதை மறைக்கும் உருவகம்
- ✡ சுயமான உருவம், பிடிபடாத ஆச்சர்யம்
- ✡ அனந்தனின் திருஷ்டியில் வடிவெடுத்த வண்ணம்
- ✡ அரைகுறையான உலகின் சிரமமான வாழ்வில்



- ✡ மெதுவான முயற்சி, கண் மூடிய சக்தி
- ✡ மடமையான மனிதனின் தெய்வீக மனம்
- ✡ ஜடமான இருண்ட மண்ணில் பிறந்த மேதை
- ✡ கலையின் பிரதிகளைப் புவியில் பார்த்து எழுதும்
- ✡ உலகைக் கடந்து, இலட்சியத்தை நாடி
- ✡ உழைப்பாளியின் பயனற்ற கருவி, கரடுமுரடான களிமண்
- ✡ இதயத்தை எழுப்பிச் செயல்படும் முயற்சி
- ✡ தெய்வீக எண்ணம் எழுப்பும் மாயமான கட்டடம்
- ✡ பிறவாதவனுக்கு காலத்தின் சத்திரம் கண்ட ரூபம்
- ✡ ஜீவன் உயர்ந்த நினைவால் உள்ளம் புல்லரித்து
- ✡ காலத்தைத் தாண்டிய கருத்தைக் கொணரும்
- ✡ புவியில் இயற்கை திட்டத்திற்கு ஒவ்வாத தெய்வீகம்
- ✡ பிடிபடாத தழல் பிரம்மத்தின் அற்புதம்
- ✡ பிரம்மத்தில் வதியும் பிறக்காத சலனம்
- ✡ ஆத்மாவின் அமர வாழ்வின் அதிஅற்புதம்
- ✡ அசையாத காலம், அழியாத உலகம்
- ✡ ஆழ்ந்த இடத்தின் மாற்றமறியாத கவி

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சக்தியும் ஜீவியமும் பிரிந்துள்ளன. அவை யோகத்தால் தாமே சேரவேண்டும். ஜீவியத்தை, சக்தி வலிந்து செயல்படச் செய்தால் சத்தியம் பொய்யாகும்.

***தானே சேர்வது மெய். வலிய சேர்ப்பது பொய்.***

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIX. Life

Here is a distinction. Page No.182
We elevate it into an essential difference. Para No.15
Is there any justification for it?
There is life in us.
There is life in the plant.
What is the difference?
We have the power of locomotion.
It is a difference.
It has nothing to do with vitality.
We possess conscious sensation.
It is not yet developed in the plant.
This is what we know.
Man has conscious sensation.
It is a mental response.
They, often, if not always, express as nervous responses.
It is a value of the mind.
It is equally a value of the nerve-system.
The body is agitated by the nervous action.



## 19. வாழ்வு

இங்கு மாற்றமுண்டு.
மாறுபாட்டை நாம் வேறுபாடுஎனக் கொள்கிறோம்.
அது அவசியமா?
நமக்கு உயிருண்டு.
தாவரத்திற்கு உயிருண்டு.
என்ன வித்தியாசம்?
நம்மால் நடக்க முடியும்.
அதுவே வித்தியாசம்.
இதற்கும் உயிருக்கும் தொடர்பில்லை.
நம் உணர்வை நாமறிவோம்.
அது தாவரத்திற்கில்லை.
இதுவே நாமறிந்தது.
மனிதனுக்குத் தன் உணர்ச்சி தெரியும்.
இது மனம் செயல்படும் விதம்.
பொதுவாக இது நரம்பு செயல்படும் வகை.
என்றாலும் இது மனத்தின் தன்மை.
நரம்பு மண்டலம் இதையே செய்கிறது.
நரம்பின் செயல் உடலை அதிரச் செய்கிறது.

In the plant there are symptoms.
They are of nervous sensation.
Some appear as pleasure.
Others look like pain.
Waking, sleep, exhilaration are others.
Dullness, fatigue, etc. are also of that type.
But sensation is sensation.
It may be mentally conscious.
Or, it may be vitally sensitive.
Sensation is a form of consciousness.
The plant is sensitive.
It shrinks from a contact.
It appears it is nervously affected.
Something in it dislikes the contact.
It tries to draw away from it.
It is subconscious sensation in the plant.
The same kind of operation is there in us.
Ours is a human system.
We can bring them to the surface.
It can be done even long after the event.
It may not affect the nervous system anymore.
Still it can be brought to the surface.
The subconscious is vaster than the conscious.
Evidence is collecting in a great mass.
It is ever increasing.
It is irrefutable.
It is subconscious mentality in us.
The plant has no superficially vigilant mind.
It can be awakened to the valuation.
It can evaluate the subconscious sensation.



தாவரத்தில் அறிகுறிகள் எழுகின்றன.
அவை நரம்பில் எழும் உணர்ச்சி.
சிலவற்றை நாம் சந்தோஷம்என்கிறோம்.
மற்றவை வலி.
விழிப்பு, தூக்கம், ஆர்வம் இதர உணர்ச்சிகள்.
மந்தம், களைப்பு மற்றவை.
உணர்ச்சியெனில் அது உணர்ச்சியே.
இதை மனம் அறியலாம்.
நரம்பு அறியலாம்.
உணர்ச்சி ஜீவிய ரூபம்.
தாவரம் உணரும்.
தொட்டால் அது நகருகிறது.
அதன் நரம்பு பாதிக்கப்படுகிறது.
தொடுவது அதற்குப் பிடிக்கவில்லை.
தூரப் போக முயல்கிறது.
இதை ஆழ்மன உணர்வுஎன நாம் தாவரத்தில் அறிகிறோம்.
இதுவே நம்மிடம் உண்டு.
நாம் மனிதர்.
நம்மால் இதை நினைவுபடுத்த முடியும்.
நாளானபின்னும் இதைச் செய்யலாம்.
நரம்பைத் தொடாமலிருக்கலாம்.
இருந்தாலும் அதை மேலே கொண்டு வரலாம்.
ஆழ்மனம் விழிப்பான மனத்தைவிடப் பெரியது.
ஏராளமான செய்திகள் வெளிவருகின்றன.
இவை அதிகரித்தபடியிருக்கின்றன.
இவை மறுக்க முடியாதவை.
மனம் நம்முள் ஆழ்ந்த நிலையிது.
மேலே உஷாரான மனம் தாவரத்திற்கில்லை.
அது விழித்து நடப்பதை அறிய முடியும்.
ஆழ்மன உணர்வு என்னஎன்று அதனால் அறிய முடியும்.

Our aim is to identify the phenomena.
It is essential.
It makes no difference to our aim.
The phenomenon is the same.
Therefore, the thing manifested must be the aim.
It is the subconscious mind.
There can be a more rudimentary life operation.
It can be of the sub-conscious sense mind.
It can be in the metal.
It is quite possible.
There is no bodily agitation in the metal.
It corresponds to the nervous system.
The absence or presence of bodily agitation is immaterial.
It makes no essential difference.
The presence of vitality in the metal is not expressed by it.
There is no locomotion in the plant.
Does it mean there is no life in the plant?

Conscious becomes subconscious in the body. Page No.183
Or the subconscious becomes conscious. Para No.16
What is the actual transition?
There is a real difference.
It lies in the absorption of the conscious energy.
It is done by a part of the work.
It is exclusive concentration.
More or less, it is so.
There are certain forms of concentration.
We call it mentality.
It is *Prajnana*.
It is apprehensive consciousness.



தோற்றத்தை அறிவது நம் நோக்கம்.
அது முக்கியம்.
நம் நோக்கம் அதனால் பாதிக்கப்படாது.
விஷயம் ஒன்றே.
அதனால் வெளிப்படும் விஷயமும் ஒன்றாக இருக்க வேண்டும்.
இது ஆழ்மனம்.
இதற்கும் குறைவான உயிரின் செயலிருக்கலாம்.
இது ஆழ்மனத்தின் புலன் உணர்வு.
இது உலோகத்திலிருக்க முடியும்.
இது முடியும்.
உலோகத்தின் உடலில் அசைவில்லை.
அசைவு நரம்பிற்குரியது.
உடல் அசைவதும், அசையாததும் விஷயமில்லை.
அது முக்கிய மாற்றமில்லை.
உலோகத்திலுள்ள உயிர் அப்படி வெளிப்படுவதில்லை.
தாவரம் நகர்வதில்லை.
அதனால் தாவரத்திற்கு உயிரில்லைஎனப் பொருளாகுமா?

விழிப்பு, ஆழத்திற்கு உடலில் போய் மறைகிறது.
ஆழம் விழிக்கிறது.
இது என்ன மாறுதல்?
உண்மையில் மாற்றம் உண்டு.
விழிப்பான சக்தி கிரகிக்கப்படுகிறது.
இது வேலையில் காணப்படும்.
இது ஒருமுகமான நிஷ்டை.
ஏறத்தாழ, அப்படிக் கூறலாம்.
பல நிலைகளில் மனம் குவிகிறது.
நாம் அதை மனப்பான்மை என்கிறோம்.
அது பிரக்ஞா.
புறம் புலப்படும் மனம்எனலாம்.

It almost ceases to act consciously.
Maybe it is quite so.
Yet the work goes on.
It is constant and perfect.
The body works.
The nerves work.
The work of the sense-mind continues.
They go on unnoticed.
It has all become subconscious.
In only one activity the mind is active.
It is luminously active.
It can be in a chain of activities.
Now *I am* writing.

It is a physical act of writing.
It is a largely a subconscious act.
Sometimes it is entirely subconscious.
The body makes certain movements.
They are nervous movements.
We say it is unconscious.
The mind is occupied with the thought.
It is awake only to it.
There is a whole man.
It may sink into the subconscious.
Yet there are habitual movements.
They may continue.
They imply the action of the mind.
We see it in many phenomena of sleep.
Man may rise into the superconscient.
Yet he may be active.



அது தன்னை மறக்கிறது.
முழுவதும் தன்னை மறக்கலாம்.
இருந்தாலும் வேலை நடக்கிறது.
தொடர்ந்து, சிறப்பாக நடக்கிறது.
உடல் வேலை செய்கிறது.
உணர்ச்சி வேலை செய்கிறது.
புலன் தொடர்ந்தும் வேலை செய்கிறது.
கண்ணில் படாமல் இவை நடக்கின்றன.
இவை ஆழத்திற்குப் போகின்றன.
ஒரு வேலையில்மட்டும் விழிப்புள்ளது.
இது பிரகாசமான செயல்.
இது பல வேலைகளிலுமிருக்கலாம்.
*நான் எழுதுகிறேன்.
(* ஸ்ரீ அரவிந்தர் எழுதுகிறார்).
இது கையால் எழுதுவது.
பெரும்பாலும் இச்செயல் ஆழத்திற்குரியது.
சில சமயங்களில் அது முழுவதும் அப்படிப்பட்டது.
உடல் சில வகைகளில் அசைகிறது.
அவை உணர்வின் அசைவுகள்.
இது நாமறியாதது என்கிறோம்.
மனம் எண்ணத்தால் ஆக்ரமிக்கப்பட்டுள்ளது.
மனம் எண்ணத்தைமட்டும் அறியும்.
மனிதன் முழுமையுடையவன்.
இது ஆழத்தில் மறையலாம்.
இவை பழக்கமான செயல்கள்.
அதைத் தொடரலாம்.
அவை மனத்தால் செய்யப்படுபவை.
தூக்க நிகழ்ச்சிகளில் இவை தெரியும்.
மனிதன் பரமாத்மாவை அடையலாம்.
இருந்தாலும், அங்கும் அவன் செயல்படலாம்.

He may do so in the subliminal in the body.
It happens in certain phenomena.
It is samadhi or yogic trance.
There is a difference.
It is now evident to us.
It is between the plant sensation and our sensation.
There is a conscious Force.
It manifests itself in the universe.
It is involved in the sleep of Matter.
It has not yet fully emerged.
It is absorbed in the sleep.
It divides the worker force from its source of work.

The source is in the superconscient knowledge.
Therefore it acts subconsciously.
It will do consciously when it emerges in man.
It is absorbed in man.
It is still indirect.
It begins to wake to its knowledge-Self.
It does exactly the same thing.
But it does it in a different way.
Its value is different.
It is a term of consciousness.

Something in us becomes a Will. Page No.183
It becomes a desire too. Para No.17
We may find it in the very atom.
That now becomes possible.
There is attraction.
There is repulsion.



அடிமனத்திலிருந்து மனிதன் செயல்படலாம்.
சில விஷயங்களில் அவை நடக்கும்.
அது சமாதி, யோக நிஷ்டை.
ஒரு மாற்றமுண்டு.
இது தெளிவு.
தாவரம் உணர்வதற்கும் நாம் உணர்வதற்கும் உள்ள வித்தியாசமிது.
விழிப்பான சக்தியுண்டு.
அது பிரபஞ்சத்தில் வெளிப்படும்.
ஜடத்தின் உறக்கத்தில் அது உறையும்.
அது முழுவதும் வெளிப்படவில்லை.
அது தூக்கத்தில் மூழ்கியுள்ளது.
வேலை செய்யும் சக்தியை அதன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து அது பிரிக்கிறது.
பரமாத்ம ஞானம் அந்த உற்பத்தி ஸ்தானம்.
அதனால் அது ஆழத்திலிருந்து செயல்படும்.
வெளிவந்தால் விழிப்பாகச் செயல்படும்.
மனிதனில் அது மூழ்கியுள்ளது.
அது மறைமுகமாக உள்ளது.
தன் ஞானத்தை அது விழித்தறிகிறது.
அதையே இதுவும் செய்கிறது.
ஆனால் அதை வேறுவிதமாகச் செய்கிறது.
அது வேறு.
அது ஜீவியத்திற்குரியது.

ஏதோ ஒன்று நம்முள் உறுதியாகிறது.
அதுவே ஆசையாகிறது.
அவற்றை நாம் அணுவிலும் காணலாம்.
இது முடியும்.
கவர்ச்சியுண்டு.
வெறுப்புண்டு.

Phenomenally they are different.
Essentially they are the same thing.
Liking and disliking are similar.
Maybe, they are the same.
They are inconscient or subconscient.
We say this of that.
There is the essence of will.
There is the essence of desire.
It is there everywhere in Nature.
They express the subconscient.
You can say, they express the inconscient.
They are quite involved.
They are sense and intelligence.
They are equally pervasive.
It is not yet sufficiently envisaged as such.
It is present in every atom of Matter.
All this is necessarily present in everything.
They are formed by the aggregation of atoms.
The Force builds and constitutes the atom.
It is present in the Force.
They are in the atom as they are in the Force.
The Force is fundamentally the *Chit-Tapas*.
Or, it is *Chit-Shakti* of the Vedanta.
It is consciousness-force.
It is inherent conscious force of conscious-being.
It manifests itself as nervous energy.
It is full of submental sensation in the plant.
It is desire-sense in the primary animal forms.
It is also desire-will.
It is self-conscious sense and force.



தோற்றத்தில் அவை வெளிப்படும்.
ஆனாலும் அவை ஒன்றே.
வெறுப்பும், விருப்பும் அது போன்றதே.
அவையிரண்டும் ஒன்றே.
அவை ஜட இருள், ஆழ்மனம்.
நாம் அவற்றை இப்படி அறிகிறோம்.
இதுவே உறுதியின் கரு.
அதுவே ஆசையின் கரு.
இது எங்கும் இயற்கையில் உள்ளது.
அவை ஆழ்மனத்தை வெளிப்படுத்தும்.
அவை ஜட இருளை வெளிப்படுத்தும்எனவும் கூறலாம்.
அதனுள் அவை புதைந்துள்ளன.
அவை உணர்வு, அறிவு.
அவையும் அதுபோல் அவற்றை ஊடுருவியுள்ளன.
இவற்றை நாம் போதுமான அளவு அறியவில்லை.
ஜடத்தின் ஒவ்வொரு அணுவிலும் அது உள்ளது.
இவை அவசியமாக எல்லாவற்றிலும் உள்ளன.
அவை அணுவின் கூட்டம்.
சக்தி அணுவை உற்பத்தி செய்கிறது.
அது சக்தியுள் உள்ளது.
சக்தியிலிருப்பதால், அணுவில் உள்ளது.
சித்-தபஸ்என்பது அடிப்படையான சக்தி.
வேதாந்தம் கூறும் சித்-சக்தியிது.
இந்த சக்தி ஜீவியத்தினுடையது.
இது ஜீவனில் உள்ள ஜீவிய சக்தி.
இது பிராணசக்தியாக வெளிவருகிறது.
தாவரத்தில் இது மனத்தின் கீழ்ப்பட்ட உணர்ச்சியாகும்.
இதுவே விலங்கினத்தின் ஆசை உணர்ச்சி.
இதுவே ஆசை-உறுதி.
இது பிரம்மத்தையறியும் புலனும் சக்தியுமாகும்.

It is so in the developing animal.
It is mental will in man.
It is mental knowledge.
It tops all the rest in man.
Life is a scale of the universal Energy.
There inconscience becomes consciousness.
It is a transition.
Life manages it.
It is an intermediary power.
It is latent in Matter.
Or, submerged in Matter.
It is delivered by its own force into submental being.
It is finally delivered by Mind.
It does so by its emergence.
It emerges into the full possibility of its dynamics.

*Contd…*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பெற்றோர்-குழந்தைப் பாசம்; தம்பதிகள்; நட்பு; குரு-சிஷ்ய உறவு ஆகியவை உறவுகளில் சிறந்தவை. உறவைப் புனிதப்படுத்தும்பொழுது உச்சக்கட்டத்தை எட்டுவது தம்பதிகளின் உறவு. புனிதப்படுத்தப்பட்ட உறவை ஆன்மீகச் சிகரத்திற்குக் கொண்டுசெல்ல குரு-சிஷ்ய உறவே அனுமதிக்கும்.

***திருமணத்தைவிட உயர்ந்த குரு-சிஷ்ய உறவு.***



வளரும் விலங்கில் இது தெரியும்.
மனித மனத்தின் உறுதியிது.
இது மனம் பெற்ற ஞானம்.
மனிதனில் இது மற்றவற்றைக் கடந்தது.
பிரபஞ்ச சக்தியின் ஏணி வாழ்வு.
இதில் ஜடஇருள் ஜீவியமாகிறது.
இது மாற்றம்.
வாழ்வு இதை நிர்வாகம் செய்யும்.
இது இடைப்பட்ட சக்தி.
இது ஜடத்துள் புதைந்துள்ளது.
ஜடத்துள் புதைந்தும் கரைந்தும் உள்ளது.
தன் சொந்த வீரியத்தால் மனத்திற்குட்பட்ட ஜீவனுக்கு தன்னையளிக்கிறது.
முடிவாக மனம் இதற்கு விடுதலை தரும்.
வெளிவருவதால் இது நடக்கிறது.
வெளிப்பாட்டின் முழு வாய்ப்புள் அது எழும்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கம்ப்யூட்டர், பல்ப், போன், நகப்பாலீஷ் ஆகியவை தனி மனிதன் பயன்படுத்தக் கூடியவை. சிருஷ்டியின் முறையை வாழ்வில் பயன்படுத்தும் விற்பனைப் பொருளிலும் கொண்டுவர முடியும். அவனே முறையாக வெளிப்-படுவான். அது உலகெங்கும் உடனே பரவும்.

***விற்பனையின் சிருஷ்டி.***

## இம்மாதச் செய்தி

**குறை கூறினால்**

**தலையை வலிக்கும்.**



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ அறிவுள்ள பண்புக்குரிய வாய்ப்பு

❀ எதைச் சொல்ல வேண்டும்என்பதைவிட எதைச் சொல்லக் கூடாதுஎன்பது முக்கியம்.

அதை முழுவதும் தெரிந்தவன் பண்புள்ளவன்.

அறிவுள்ளவன் சத்விஷயம் தெரிந்தவன்.

திட்டு வாங்கி மனம் புண்பட்டு சண்டையிடுபவனை சமாதானம் செய்ய முடியாது. தத்துவம் தெரிந்தவன் அவனிடம் "நீ யார், ஆத்மாவல்லவா? அதைக் குறைகூற முடியுமா?" எனக் கேட்பான். "உன் ஆத்மாவை யார் குறை கூற முடியும்'' என்ற ஞானம் மத்தியஸ்தம் செய்ய பேருதவியாக இருக்கும்.

எந்தப் பிரச்சினையையும் ஆண்டவன் திருவுள்ளம்என எடுத்துக் கொண்டால்,

1) தீராத பிரச்சினை தீரும்.

2) பொங்கிவரும் ஆத்திரம் சற்று தணியும்.

3) அதன் வழியாகவும் நல்லது நடக்கும்என நம்ப முடியும்.

ஆத்மஞானம் வாழ்வில் வெற்றிபெற அளவு கடந்து உதவும். நேருவை "the perfect Aryan type" சிறந்த ஆரியன் என்கிறார் பகவான். தத்துவம் படித்தவன் நல்லவனாக இருந்தால் ஊரை ஆள்வான். அவன் சத்தியத்தை கைவிட்டுவிட்டதால் பலன் பாதிக்குமேல் அழிந்துவிட்டது. பொல்லாதவனாக இருந்தால் அவனை எவரும் எளிதில்

தண்டிக்க முடியாது. அறிவு அதிகமாக இருப்பதால் முடிவில் தப்பித்துக்கொள்வான்.

நானாவதி கடற்படை ஆபீசர். உயரமாக, சிவப்பாக, அழகாக இருப்பார். அவர் மனைவி அழகி. கடற்படையில் வேலை செய்வதால் வீட்டிற்கு வருஷத்தில் கொஞ்ச நாளைக்குத்தான் வருவார். பம்பாயில் அகூஜா என்பவன் பணக்காரன். பெண்கள் விஷயத்தில் மோசமானபேர் வாங்கியவன். ஒரு மயக்கம் தரும் பவுடரை அவன் விரும்பும் பெண்ணுக்குத் தந்து அவளைக் கெடுப்பது அவன் வழக்கம். நானாவதியின் மனைவி அதற்கு பலியானாள். நானாவதி விஷயம் கேள்விப்பட்டு வீட்டிற்கு வந்து மனைவியை விசாரித்து உண்மையை அறிந்தார். ''நீ அவனையே மணம் செய்து கொள்'' என்றார். அவன் சம்மதப்படவில்லைஎன மனைவி கூறினாள். அவனை நானாவதியே பார்க்கப் போனார். அவன் குளித்துக் கொண்டிருந்தான். கதவைத் தட்டி திறக்கச் சொல்லி, ''என் மனைவியை நீயே மணந்து கொள்'' என்றார். ''எத்தனையோ நாய்களுடன் நான் பழகுகிறேன். அத்தனை பெயரையும் நான் மணக்க முடியுமா?'' என்றான். நானாவதி கோபப்பட்டு அவனைச் சுட்டுக் கொன்றார்.

மும்பாய் ஹைகோர்ட்டில் வழக்கு முழுவதும் நானாவதிக்கு எதிராக நடந்தது. எல்லா சாட்சிகளும், சந்தர்ப்பங்களும் எதிரானவை. நானாவதி வக்கீல், ''நானாவதி சுடவில்லை, இருவரும் துப்பாக்கியுடன் (wrestle) முரண்டியபொழுது துப்பாக்கி வெடித்து அகூஜா இறந்துவிட்டான்'' எனப் பேசினார். எடுபடவில்லை.

கேஸ் ஜூரிக்குப் போயிற்று. ஜூரிகட்கு நானாவதி மீது அனுதாபம். அவமானப்பட்ட கணவனுக்கு நியாயம் வழங்கப் பிரியப்பட்டு ஏகமனதாக விடுதலை செய்தது.

கோர்ட்டில் சட்டம் செல்லும். நிலைமை (exceptional)



முக்கியமானால் ஊரார் அபிப்பிராயமே சட்டமாகச் செயல்படும்.

அட்மிரல் நானாவதியை விடுதலை செய்தார்கள். உலகம் அவன் குற்றம், குற்றமில்லைஎன நினைத்தது.

அன்பர்கள் சத்தியசீலர்களானால், செல்வம் USAவைவிட அதிகமாக இருக்கும். எதுவும் செய்ய வேண்டாம்.

* எல்லாம் திறமையாகச் செய்தால், அமெரிக்காவில் அதிகபட்சப் பணக்காரன் இந்தியாவில் ஏழை ஆவான்.
  - ஞானம் இந்தியாவில் உள்ளது.
  - செல்வம் இங்குள்ளது.
  - ஞானம்தரும் செல்வம் உழைப்புதரும் செல்வத்தைப் போல் ஆயிரமடங்கு பெரியது.
  - ஞானம்பெறும் செல்வம் சத்தியத்தால் பெற்றால் செல்வம் காற்றுப் போலாகும்.
  - இந்தியா ஜகத்குரு.
  - அன்பன் அகில உலகுக்கும் எடுத்துக்காட்டு.
  - மனம் நேர்மையாக, நிர்மலமாக, நிதானமாக, பெருந்தன்மையாக, பண்பால் பக்குவப்பட்டால் *பணம் கண்ணுக்குத் தெரியாது. மலையாகக் குவியும்.*

6 மாதம் விவசாயி பயிரிட்டு 10,000 ரூபாய் செலவுசெய்து பெறுவது லாபமா, நஷ்டமாஎன நிலையில்லை. பொதுவாக இலாபம் ரூ. 500 அல்லது ரூ.1,000 வரும். சமயத்தில் நஷ்டமும் வரும். அவன் சரக்கை வாங்கி அடுத்த நாள் அதில் ரூ.1,000 இலாபத்திற்கு வியாபாரி விற்கிறான்.

- வியாபாரத்தில் இலாபம் விவசாயத்தைவிட அதிகம்.

பாங்க் நம் ஊரில் ஆரம்பித்து நாமெல்லாம் போட்ட டெபாசிட் 1 கோடி ரூபாயானால் பாங்க் 9 கோடி ரூபாய் கடன் கொடுக்கிறது. அது சட்டம். பாங்க்கிற்கு 9 கோடிக்குரிய வட்டி வரும். பொதுமக்கள் 1 கோடியை 9 கோடியாய் பெருக்கும் சக்தியை சட்டம் பாங்கிற்குக் கொடுத்துள்ளது. மேலே போகப்போக பணம் எளிதில் உற்பத்தியாகும்; அபரிமிதமாக உற்பத்தியாகும்.

அமெரிக்கக் கம்பனி மெக்கன்சி சமீபத்தில் வெளியிட்ட ரிப்போர்டில் "இந்தியா பேனாவால் பெரும்பணம் உற்பத்தி செய்யலாம். உதாரணமாக இந்த ஆண்டு சில சட்டங்களை முக்கியமாக மாற்றினால் அதனால்மட்டும் 2 இலட்சம் கோடி ரூபாய் உபரியாக நாட்டிற்கு உற்பத்தியாகும்" என்று கூறுகிறது. 2001இல் நாட்டில் 100 கோடி மக்கள் சம்பாதித்த மொத்த பணம் 18 இலட்சம் கோடி. பேனாவால் 2 இலட்சம் கோடி சர்க்காரால் உற்பத்தி செய்ய முடியும்.

- உலகத்தில் மேலைநாடுகளில் பல வழிகளில் பணம் *தானே* உற்பத்தியாகிறது.
- மெக்கன்சி இந்தியா அதைச் சில விஷயங்களில் பின்பற்றிப் பயனடையலாம்எனக் கூறுகிறது.
- இதனுள் உள்ளது ஒரு சூட்சுமம்.

  விபரம் தெரிந்தால் எளிதில் பெரும்பணம் ஈட்டலாம்.
- அன்பர்கட்கு இந்த விவரங்களைத் தெரிவிக்க "பணம்" என்றொரு நூல் சமீபத்தில் வெளி வர இருக்கிறது.
- அன்னையை சமர்ப்பணத்தால் ஏற்பது அந்த விபரம் தெரிவதற்கு ஈடாகும்.

## ✡ கொடுமைப்பட்டவன் சம்பாதிப்பான்

❀ நாடு 60 ஆண்டுகளாக, சுதந்திரம் அனுபவிக்கிறது.



சுதந்திரம் பெரிய வாய்ப்பு.

ஒரு வாய்ப்பு வந்தால் ஏற்கனவே பணக்காரனுக்கு அது அதிகமாகப் பலிக்கும்.

சுதந்திரம் வந்தபின் ஏழை மேலும் ஏழையாகப் போகிறான்; பணக்காரன் மேலும் சம்பாதிக்கிறான். சுதந்திரம் பணக்காரனுக்குத்தான் வந்ததுஎன்ற குறை 1970, 1980 வரை கேட்டோம். இப்பொழுது அது காதில் விழுவதில்லை.

இது உண்மை. ஆனால் முழுஉண்மையில்லை.

புதிய வாய்ப்பு வந்தால் ஏற்கனவே வசதியுள்ளவன் அதை அதிகமாகப் பெறக்கூடிய வசதி படைத்தவனாக இருப்பதால் அவனுக்குச் சாதகமாகிறது.

கல்லூரி வந்தால் பணக்காரன் படிக்கலாம்.

டிராபிக் ஏராளமான இலாபம் தந்தால் பஸ் ஓனருக்கு லாபம்.

இதில் வேறோர் உண்மையும் உண்டு.

> தாழ்த்தப்பட்டவன், கொடுமைக்கு ஆளானவன், புறக்கணிக்கப்பட்டவன், எவரும் ஏறிட்டுப் பார்க்காத-வரெல்லாம் சம்பாதிக்க ஆரம்பித்தால் அளவு கடந்து சம்பாதிக்கலாம். எந்த ஊரிலும் உள்ள புதுப் பணக்காரர்களில் 100 பேரை எடுத்துப் பார்த்தால் 50 பேருக்குமேல் அடி மட்டத்திலிருந்து வந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் திறமை உண்டு; உழைப்புண்டு; ஆர்வமுண்டு. அது சம்பாதிக்கும்.

★ ஏற்கனவே வசதியுள்ளவன் வசதியால் சம்பாதிக்-கிறான்.

★ ஏற்கனவே தாழ்ந்தவன் திறமையால் சம்பாதிக்கிறான்.

★ உழைப்புள்ளவர் எவரும் இன்று பெரும்பணம் சம்பாதிக்கிறார்கள்.

★ அன்னைபக்தர்கள் நிலையென்ன?

- இந்த பக்தியுள் வசதி, திறமை, உழைப்பு, ஆர்வம் உண்டு.

  உள்ள பக்தியும், நம்பிக்கையும் உண்மையானால் அன்பர் மேற்சொன்னவர் பெறுவதைப் பெறுவார்.

- அன்பருக்கே உழைப்பும், திறமையும், வசதியும் - ஏதாவது ஒன்று - இருந்தால் அதன் பலன் அபரிமிதம்.

- அன்னை பக்தனுக்கு திறமையிருந்து, அன்னை முறையைக் கைப்பற்றினால் எந்தத் தொழில் செய்தாலும் அந்த ஊரில் முதன்மை பெறுவான்.

- காலம் மாறி பலிக்காதது பலிக்கிறது.

  நாடு சுதந்திரம் பெற்று மக்கள் வெற்றி பெறும் வாய்ப்புத் தருகிறது.

  அன்பருக்கு அன்னை கஷ்டகாலத்திலும் (1940க்கு முன்) வெற்றி தருபவர்.

  இன்று 1956இலிருந்து தோல்வி அழிந்துவிட்டது.

  1973இலிருந்து சொர்க்கமே பூவுலகுக்கு வந்து விட்டது.

  இந்த நாளில் அன்பர் திரண்ட செல்வம் சம்பாதிக்க இயலும்.

## ✡ அதிர்ஷ்டம், அருள், பேரருள்

❀ நமக்கு எது அதிர்ஷ்டம், அருள், பேரருள்?

மனம் எப்படி மதரை ஏற்பது?

திருஷ்டிஎன்றால் பார்வை.

அ-திர்ஷ்டம்என்றால் பார்வையில் இல்லாதது.

போன ஜன்மப் பலன் அதிர்ஷ்டம்.



அன்னை தரும் தவப்பலன் வரும் பிறவிகளில் பெற வேண்டியது.

அதைக் கடந்தது (Supramental luck) சத்தியஜீவிய அதிர்ஷ்டம்.

எதிர்காலம் நிகழ்காலமாவதும் கர்மத்தின் இராஜ்ஜியம் அழிவதாகும்.

காலத்தைக் கடந்தது அன்னையின் அதிர்ஷ்டம் - அருளெனப்படும்.

மூன்றாம் நிலைக்காலம் (simultaneous Time) உலகம் அறியாதது.

அன்னை அதைத் தருகிறார்.

ஆதாய மனப்பான்மை பூர்த்தியாகும்.

பரந்த மனப்பான்மை அதிகமாகப் பூர்த்தியாகும்.

அதுவும் மனப்பான்மையே - மனத்திற்குக் கட்டுப்பட்டது.

அன்னை மனத்தைக் கடந்தவர்.

எவர் ஆசிரமத்துள் நுழைய பாஸ்தர மறுத்தாரோ, எவரால் வேண்டியவர்க்கும் நல்லது செய்ய முடியாதோ அவர் டிசம்பர் 5ஆம் தேதி மிக முக்கியமான இடத்தில் - பகவான் அறையில் - தியானம் செய்ய அனுமதி தருவது, மிகப்பெரிய சொத்து வாங்க எட்ட இருப்பவருக்கு உதவுவது பேரருள் செய்வது.

நிலம் சம்பாதித்தால் நிலத்தின் விலையை மகசூலாகச் சம்பாதிக்கும்.

Water Divinerரும் வால்டரும் காணிக்கை தரவில்லை. நாம் அதைத் தர மறுக்கக் கூடாது. நாம் தரவேண்டியது நிலம் முழுவதும் காணிக்கையாகத் தரவேண்டும்.

அன்னை தம்மை முழுவதும் நமக்குத்தர முன்வரும் பொழுது அதைப் பெற நாம் அன்னைக்கும் அன்பர்கட்கும் நம்மை முழுமையாகத் தரவேண்டும்.

இந்தக் காணிக்கையின் சக்தியை அனுபவத்தில் பார்த்தால் பெருந் தொகை வரும்.

இதுவரை யாரும் சம்பாதிக்காத தொகையது.

சம்பாதிப்பது உழைப்பன்று, உயிரன்று, ஜீவன்.

ஜீவன் சம்பாதிக்க சரணாகதியை நாடவேண்டும்.

அது பெறுவது ஆண்டவனை முழுவதுமாகப் பெறும்.

அன்னை நம் சரணாகதியை ஏற்பது பேரருள்.

மனம் தயாரானால், மாநிலம் சொந்தமாகும்.

உலகம் உள்ளேயிருப்பதைக் கண்டபின் அதைவிடக் குறைவாக எப்படிச் சம்பாதிப்பது?

நெகிழ்ந்த மனம் நெடிது வாழும்.

இல்லாதது இல்லை. பெறாததுண்டு.

## ✡ சேவை

❀ சேவைஎன்றால் என்ன?

ஒருவர் வருஷத்திற்கு 5 இலட்சம் சம்பாதித்து பள்ளிக்கூடத்திற்குச் செலவு செய்கிறார். இதுபோன்ற சேவையை நான் கேட்டதில்லை. அவர்கள் பெற்றது கெட்ட பெயர், ஆபத்து, பிள்ளைகளை அனுப்ப கூலிக்காரர் மறுத்தனர்.

சேவையைப் பெற்றவர் பாதகம் செய்வது தவறாது.

எவ்வளவு மட்டமானவனும் பெறும் நிலையிலிருக்கப் பிரியப்படவில்லை.

கொடுக்கும் அந்தஸ்தை மனம் நாடும்.

நடைமுறையில் பெறும் பொருளையும், கொடுக்கும் அந்தஸ்தும் வேண்டும்.

வேலை குதிரைக்கொம்பான காலத்தில் SSLCயை 5ஆம் முறை எழுதி பாஸ் செய்தவனுக்கு வலிய வேலை வாங்கிக் கொடுக்க முனைந்தவரை, பெறுபவன் ‘‘நான் உயர்ந்தவன். நீ சேவை செய்ய கடமைப்பட்டவன்’’ என்று வேலையை ‘நான் கேட்கவில்லை’ என்றது இந்த மனப்பான்மை.

ஐரோப்பாவில் ஒரு சொல்லுண்டு. ஒருவருக்கு அடுத்தவர் மீது வெறுப்பு ஏற்பட்டால் அடுத்தவர் அனைவரிடமும் ‘‘ஏன் இவர் என்மீது கோபமாக இருக்கிறார்எனத் தெரியவில்லை. நான் இவருக்கு எந்த நல்லதும் செய்யவில்லையே’’ என்று கூறுவது வழக்கம். உதவியைப் பெறுபவர் உதவி செய்தவர்மீது கோபப்பட வேண்டும் என்று புரிந்த சமுதாயம் பேசும் பேச்சு இது.

பாரதத்தில் இக்கருத்து இல்லை.

பெறுவது ego. அது பாம்புபோல் தவறாது கடிக்கும்.

கேட்டுக் கொடுத்தால் பாதகம் குறையும்.

கேட்காமல் கொடுத்தால் பெரிய தீங்கிழைக்க உதவும்.

உறவு மாறினால் - ஒரு கை வலுத்தால் - வலுவான கை உபத்திரவம் தரும்.

சுயநலமானவர் பிறருக்கு வலிய உதவுவதில்லை. அவர்கட்குப் பிரச்சினையில்லை.

கொடுப்பவருக்கே, அதுவும் வலிய கொடுப்பவருக்கே, நான் கூறும் உபத்திரவம் எழும்.

இந்தச் சட்டப்படி எந்த உறவையும் சோதனை செய்யலாம். (Equilibrium) கொடுப்பதும், பெறுவதும் சமமானால் நட்பு வளரும், உயரும், நீடிக்கும்.

அன்னை விதிவிலக்கு.

கொடுப்பதால் வளர்வது அன்னையின் அருள்.

அன்னைபோல நம்மால் கொடுக்க முடியுமானால் - அகந்தையின்றி - கொடுப்பதால் உபத்திரவம் வாராது.

கல்லூரிப் பேராசிரியரிடம் 20 மாணவர்கள் ட்யூஷன்

படித்தனர். அனைவரும் பாஸ் செய்தனர். 18 பேர் வந்து சொல்லிவிட்டுப் போனார்கள். இருவர் வரவில்லை. வாராத இரு மாணவர்களும் பேராசிரியரிடம் இலவசமாகப் பயின்றனர். இலவசமாகப் பயின்றதால் நன்றி சொல்ல-மாட்டார்என்பது பகவான் சட்டம். ஒரு தமிழாசிரியர்பையன் அதிபுத்திசாலி. என் வகுப்பில் பயின்றவன். அவன் முதல் மாணவன். ட்யூஷன் தேவை இல்லை. நானே பிரியப்பட்டு ஆங்கிலம் கற்பிக்க அவனை அழைத்தேன்.

X Stdஇல் சிறப்பான ஆங்கிலம் எழுதினான். 52 புத்தகங்களை (Retold English stories of each 100 pages) சுருக்கி 600 பக்கம் உயர்ந்த ஆங்கிலம் எழுதினான். சர்வகலாசாலை ஆங்கில ஆசிரியர் அதைப் பார்த்துவிட்டு "இந்த அளவுக்கு உயர்ந்த ஆங்கிலம் இன்று என்னால் எழுத முடியாது" என்றார். 2 ஆண்டு என்னிடம் இலவசமாகப் பயின்றான். பாஸ் செய்தான். அவன் வீடு என் வீட்டின் சமீபம். வந்து சொல்லவில்லை. அவன் தகப்பனாரை தினமும் சந்திப்பேன். ''என் மகனுக்கு உங்களைப் பார்க்க ஆவல்'' என தினமும் கூறுவார். ஏனோ P.U.C. பரிட்சைக்குப் போக மறுத்துவிட்டான். P.U.C. பாஸ் செய்த பிறகு அவனையும் அவன் தகப்பனாரையும் பஸ்ஸில் சந்தித்தேன். "என் மகனுக்கு உங்களைப் பார்க்க ஆவல்'' என்றார். மேலும் சில வருஷங்கள் கழித்து தமிழாசிரியர் வேறு விஷயமாக எனக்கு எழுதிய கடிதத்தில் ''டாக்டருக்கு உங்களைப் பார்க்க ஆவல்" (அவன் பல் டாக்டராகிவிட்டான்) என எழுதினார். 40ஆம் வயதில் என்னைப் பார்க்க வந்தான். நான் அன்பர்களைப் பார்ப்பதை நிறுத்திவிட்ட நாள் என்பதால் நான் பார்க்கவில்லை.

**இலவசமாகப் பெற்ற உதவி உறுத்தும்.**

**பெற்றவரை, கொடுத்தவருக்கு எதிரியாக்கும்என பகவான் கூறுகிறார்.**



**உதவி செய்து, உபத்திரவம் பெறாதவரே உலகிலில்லை.**

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பூரணயோகத்தின் சூட்சும இரகஸ்யங்கள்:

பிரபஞ்சம் மனிதனாகத் தன்னைச் சுருக்க முயல்கிறது.

மனிதன் பிரபஞ்சமாக மலர்ந்து விரிய முயல்கிறான்.

வாழ்வில் (surface) மனிதன் இதற்குத் தன்னைத் தயார் செய்து கொள்கிறான்.

ஆழத்தில் முடிவு தெரிகிறது. (மேலெழுந்த வாழ்வில் தயாரான சிருஷ்டி ஆழத்தில் உருவாகிறது).

மேலெழுந்த வாழ்விலிருந்து ஆழத்திற்குச் சென்றால் ஆன்மா விடுதலையடைந்து 3 சந்தர்ப்பங்கள் எழுகின்றன.

முதல் நிலை : நிர்வாணம்எய்தி ஆன்மா கரையும்.

இரண்டாம் நிலை : ஆன்மா புருஷனாகக் காட்சியளிக்கும். (மனோமயப்புருஷனைக் காணுதல்)

மூன்றாம் நிலை : சைத்தியப்புருஷன் வெளிப்படுதல்.

புருஷனைக் கண்டபின், புருஷோத்தமனை அடைந்து மோட்சம் பெறுவது கீதைவழி. சைத்தியப்புருஷனைக் கண்டு, ஈஸ்வரனை அடைந்து, தெய்வத்தை உலகுக்குக் கொண்டு வருவது பூரணயோகம்.

***பூரணயோகத்தின் சூட்சும இரகஸ்யங்கள்.***

# பாரம்பரிய ஆன்மீகமும்,
# அன்னை மற்றும் பகவான் கண்ட புதிய ஆன்மீகமும்

N. அசோகன்

| வ. எண் | பாரம்பரிய ஆன்மீகம் | வ. எண் | அன்னை மற்றும் பகவான் கண்ட புதிய ஆன்மீகம் |
|---|---|---|---|
| 1. | உலகம் என்பது ஒரு மாயை, எனவே அதிலிருந்து நாம் விடுபட வேண்டும். | 1. | உலகம் மாயையில்லை. மாறாக அது உண்மையானது. ஆகவே அதிலிருந்து விடுபட நினைக்காமல் அதைத் திருவுருமாற்றம்செய்ய நினைக்க வேண்டும். |
| 2. | பிரம்மத்தை நம்மால் அறியவோ, உணரவோ முடியாது. | 2. | பிரம்மத்தை நம்மறிவால் உணர முடியவில்லைஎன்றாலும் ஜீவியத்தின் உதவியைக் கொண்டு நாம் பிரம்மத்தை உணரலாம். |
| 3. | ஆன்மா என்றும் மாறாதது. ஆகவே அதற்குப் பரிணாம வளர்ச்சியில்லை. | 3. | ஜீவாத்மாவின் பிரதிநிதியான சைத்தியப்புருஷனுக்கு மாற்றமும், பரிணாம வளர்ச்சியுமுண்டு. |
| 4. | நம் ஜீவனின் எந்த பகுதியிலிருந்தாவது ஆன்மாவை விடுவித்து அதன் மூலம் மோட்சம் அடைய வேண்டும். | 4. | நம் ஜீவனின் எல்லாக் கரணங்களையும் திருவுருமாற்றம் செய்து, அதன் மூலம் நம் பர்ஸனாலிட்டியை முழுவதும் தெய்வீகமயமாக்க வேண்டும். |
| 5. | வேலை செய்தால் கர்மம் உற்பத்தி ஆகிறது. கர்மம் சேர்ந்தால் மறுபிறப்பு வருகிறது. ஆகவே மறுபிறப்பைத் தவிர்க்க நாம் வேலையையே தவிர்க்க வேண்டும். | 5. | வேலையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் நம் திருவுருமாற்றத்திற்கு கருவியாக வேலையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். |



| | | | |
|---|---|---|---|
| 6. | பணம், பதவி மற்றும் பெண்கள் ஆகியவை ஒதுக்கப்பட வேண்டும். | 6. | பணத்தை நாம் அசுர சக்திகளிடமிருந்து மீட்டு இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் ஆன்மீகத்தில் உரிமை இருக்கிறது. |
| 7. | ஆண்டவனை மனிதன்தான் தேடிப் போக வேண்டும். | 7. | மனிதன் ஆண்டவனைத் தேடுவதைவிட ஆண்டவன்தான் மனிதனை அதிகமாகத் தேடுகிறான். |
| 8. | குருநாதருடைய வழிகாட்டல் இன்றியமையாத-தாகும். | 8. | நம் உள்ளிருக்கும் இறைவன்தான் நமக்கு, குருவாக அமைவார். |
| 9. | தெய்வலோகத்தில் உள்ள கடவுள்களை வழிபட்டுக் கொண்டிருந்தால் மனிதனுக்கு அது போதும். | 9. | கடவுள்களை வழிபடுவதைத் தாண்டி வந்து மனிதன் சத்தியஜீவியத்தை நோக்கிச் செல்லவேண்டும். |
| 10. | மனிதன் வாழ்க்கைக்கும், இயற்கைக்கும் கட்டுப்பட்டவன். | 10. | உள்ளிருக்கும் இறை அம்சத்தை மனிதன் கண்டுபிடித்துவிட்டான் என்றால் மனிதன் தன் கட்டுப்பாட்டிற்குள் வாழ்க்கையையும், இயற்கையையும் கொண்டுவர முடியும். |
| 11. | அகந்தை கரைய வேண்டும். | 11. | அகந்தைக்குப் பதிலாக ஆன்மாவின் தனித்தன்மை வெளிப்பட வேண்டும். |
| 12. | மேலுலகத்தில்தான் நாம் பேரின்பத்தை அனுபவிக்க வேண்டும். | 12. | வாழ்க்கை தெய்வீகமயமாகும்பொழுது அதே பேரின்பத்தை நாம் இங்கு அனுபவிக்கலாம். |
| 13. | அறியாமை, தீமை, துன்பம் ஆகியவைகள் எல்லாம் உலகில் என்றும் நிலைத்து இருக்கும். | 13. | சத்தியஜீவியம் பூவுலகில் வெளிப்படும்பொழுது இவையெல்லாம் மறைந்து உலகம் ஓர் அற்புதமாகக் காட்சி அளிக்கும். |

| | | | |
|---|---|---|---|
| 14. | சமூகத்திற்குத் தனிமனிதன் கட்டுப்பட வேண்டும். | 14. | ஆன்மீகத் தனித்தன்மை உள்ளவரை சமூகம் கட்டுப்படுத்தாது. |
| 15. | உடம்பை உதாசினப்படுத்த வேண்டும். | 15. | சத்தியஜீவியத்தை பிஸிக்கல் லெவலில் கொண்டுவர உடம்பு ஓர் அஸ்திவாரமாக அமையும். |
| 16. | வாழ்க்கையையும், யோகத்தையும் இணைக்க முடியாது. | 16. | வாழ்க்கையையும், ஆன்மீகத்தையும் இணைத்து யோகமயமான வாழ்க்கையும் வாழமுடியும். |
| 17. | எதிர்மறையான இரட்டைகள்தாம் நமக்குத் தெரிந்தவை. | 17. | பொய், இருட்டு, தீமை என்றிவற்றின் கலப்பே இல்லாமல் தனித்து விளங்கக்கூடிய உண்மை, ஒளி, மற்றும் நன்மைகளும் உண்டு. |
| 18. | முரண்பாடுகள் ஒன்றுக்கொன்று எதிரானவை. | 18. | நமக்கு எதிர்மறையான முரண்பாடுகளாகத் தெரிபவை உண்மையில் ஒன்றோடு ஒன்று ஒத்துப்போகக்கூடியவை. |
| 19. | ஜடம் சச்சிதானந்தத்தி- லிருந்து மிகவும் வேறுபட்டது. | 19. | நாம் ஜடமென்று சொல்வது ஆனந்தத்தின் திட வடிவமாகும். |
| 20. | பிறவித் தளையிலிருந்து விடுபடுவதற்கு ஆன்மா விரும்புகிறது. | 20. | பிறவியிலிருந்து விடுபடுவதைவிட வாழ்வில் வெளிப்படுவதைத்தான் ஆன்மா விரும்புகிறது. |
| 21. | கர்மத்தை நாம் கரைக்க முடியாது. ஆகவே வேலை செய்வதைத் தவிர்த்து அதன் மூலம் கர்மம் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். | 21. | சத்தியஜீவிய அருளின் செயல்பாடு மூலமும், கடந்தகாலச் சமர்ப்பணத்தின் மூலமும் கர்மத்தைக்கூட நாம் கரைக்கலாம். |
| 22. | மனிதன் வெறும் பக்தனாக இருந்து கொண்டு ஆண்டவனை எட்ட இருந்து வழிபட வேண்டும். | 22. | மனிதனே ஆண்டவனாகலாம் என்னும்பொழுது ஏன் வழிபாட்டுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்? |



| | | | |
|---|---|---|---|
| 23. | கடுமையான விரதங்களும் உடம்பை வருத்திக் கொள்வதும் ஆன்மீக முன்னேற்றத்திற்கான அடையாளங்கள். | 23. | விரதங்களும், உடம்பை வருத்திக் கொள்வதும் ஆன்மீகப் பக்குவத்திற்கான அடையாளங்கள் இல்லை. படைப்பின் நோக்கமே ஆனந்தம் எனும்பொழுது வலியைத் தேடிப்போகாமல் நாம் ஆனந்தத்தை நாடிப்போக வேண்டும். |
| 24. | தனிப்பட்ட மனிதனுடைய மோட்சம்தான் ஆன்மீகத்தினுடைய நோக்கமாகும். | 24. | பூவுலக வாழ்க்கையை முழுவதுமாக தெய்வீகமயமாக்குவதுதான் புதிய ஆன்மீகத்தின் நோக்கமாகும். |
| 25. | ஆன்மீக ஞானத்தையும், பாரம்பரியத்தையும் பாதுகாக்க மடங்களும், ஆசிரமங்களும் தேவைப்படுகின்றன. | 25. | அவரவரும் அவரவருக்கென்று தனியாக ஆன்மீகப் பாதையை வகுத்துக்கொள்ளலாம். ஆகவே எவரும் மற்ற எவரையும் பின்பற்றத் தேவையில்லை. மடங்களும், ஆசிரமங்களும் நாளாவட்டத்தில் சாரத்தை இழந்து வெறுந் தோற்றத்தைமட்டும் தக்க வைத்துக்கொள்கின்றன. இப்படி இருப்பது ஆன்மீகத்தின் உண்மைக்கும், புதுமைக்கும் எதிரானது. |
| 26. | சாஸ்திரங்களில் எழுதியிருப்பது என்றும் உண்மை. அதை யாரும் கேள்வி கேட்கக் கூடாது. | 26. | மனிதன் சேகரிக்கும் அறிவு வளர்ந்துகொண்டே இருப்பதால் சாஸ்திரங்கள் கூறுகின்ற பழைய விஷயங்களை விலக்கிவிட்டு புது விஷயங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். |
| 27. | படைப்பில் ஒரு தொடர்ச்சியான முன்னேற்றம் இருப்பதாகவே பாரம்பரிய ஆன்மீகத்தில் ஒரு கருத்தே இல்லை. | 27. | மனிதனுக்கு அடுத்தாற்போல் சத்தியஜீவிய மனிதன் தோன்றுவான். இப்படி ஒரு பரிணாமவளர்ச்சி படைப்பில் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும். |

| | | | |
|---|---|---|---|
| 28. | பாரம்பரிய ஆன்மீகத்தில் சடங்கு மற்றும் சம்பிரதாயங்கள் மிகவும் முக்கியமாகும். | 28. | சடங்கு மற்றும் சம்பிரதாயங்களுக்குப் பதிலாக இடையறா நினைவு மற்றும் சமர்ப்பணம் ஆகியவற்றை உள்ளே வளர்த்துக்கொள்ள வேண்டும். |
| 29. | ஏழ்மையும், கடுமையான விரதங்களும் ஆன்மீகப் பக்குவத்திற்கு அடையாளங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. | 29. | ஏழ்மைக்குப் பதிலாக எளிமை வரவேற்கப்படுகிறது. செல்வவளம் ஆன்மீகத்திற்கு எதிரானதாகக் கருதப்படாமல், மஹாலஷ்மியின் வெளிப்பாடாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. |
| 30. | மனிதன் தன்னுடைய யோகசாதனையைத் தானே செய்ய வேண்டும். | 30. | சாதகர் அன்னையிடம் சரணம் அடைகிறார். சாதகருக்கு உள்ளிருக்கும் அன்னையே சாதனை செய்வார். |
| 31. | எழுத்தில் இருக்கின்ற விளக்கங்கள் மிகவும் குறைவு. குருநாதருடைய வாய்மொழி விளக்கங்களாகத்தான் பெரும்பாலான விஷயங்கள் வருகின்றன. அவற்றைக் கேள்வி கேட்காமலேயே ஏற்றுக்கொள்ள வேண்டும். | 31. | எல்லா விஷயங்களும் விபரமாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. சந்தேகங்களுக்கு விளக்கம் தரப்படுகின்றன. கலந்துரையாடலுக்கு இடம் உண்டு. |
| 32. | படைப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதற்கு ஓர் அர்த்தமுள்ள மற்றும் அறிவுக்குப் பொருத்தமான ஒரு விளக்கம் இல்லை. | 32. | படைப்பிற்குப் பின்னிருக்கும் அடிப்படையான செயல் முறைகளும் நிகழ்வுகளும் விவரமாக விளக்கப்பட்டு உள்ளன. |
| 33. | படைப்பில் அவதாரங்களைப் பற்றிய கருத்துண்டு. ஆனால் பிரம்மம் எப்படிப் படைப்பாக மாறியது மற்றும் படைப்பு எப்படி மீண்டும் பிரம்மத்தை நோக்கி செல்கிறதுஎன்பது பற்றி விளக்கம் இல்லை. மேலும் படைப்பிலுள்ள பல்வேறு நிலைகளைப் பற்றியும் தகவல் இல்லை. | 33. | பிரம்மம் எப்படிப் படைப்பாக மாறியது மற்றும் மீண்டும் படைப்பு பிரம்மத்தை நோக்கி எப்படிச் செல்கிறதுஎன்பது பற்றியும், பிரம்மம் உச்சியிலும், ஜடம் கடைசியிலும் இருக்க மற்றும் இடையில் வேறு என்னென்ன நிலைகள் உள்ளன என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் தரப்பட்டுள்ளன. |



| | | | |
|---|---|---|---|
| 34. | ஒரு மனிதனுடைய வாழ்க்கை பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம் மற்றும் சன்னியாசம் என்று நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. | 34. | இப்படி நான்கு தனித்தனி பாகங்களாகப் பிரிக்கப்படவில்லை. நேரிடையாகவே இளம் வயதிலேயே ஆன்மீகத்திற்குள் நுழையலாம். குடும்பஸ்தனாகக் காலம் கழித்துவிட்டுதான் ஆன்மீகத்திற்கு வரவேண்டும்என்று இல்லை. |
| 35. | பாவம், புண்ணியம் என்ற கருத்துகள் மிகவும் வலியுறுத்தப்படு-கின்றன. இப்பிறப்பில் நடப்பன எல்லாம் போன பிறவியின் கர்மபலன்என்று சொல்லப்படுகிறது. | 35. | பாவ, புண்ணியத்தைப் பெரிதாக வலியுறுத்தவில்லை. தர்ம, அதர்ம கண்ணோட்டங்கள் இல்லாமல் வாழ்க்கை ஒரு வெறுஞ்சக்தியாகவே கருதப்படுகிறது. |
| 36. | பரம்பொருளில் தான் கரைவதுதான் தனிப்பட்ட ஆன்மாவின் இலட்சியமாகக் கருதப்படுகிறது. | 36. | பரம்பொருள் நிலையை அடைந்த பின்னும் தனி ஒரு மனிதன் கரையாமல் தனி ஆன்மாவாகத் தொடர்ந்து செயல்படலாம். |
| 37. | ஞானயோகம், பக்தி யோகம், கர்ம யோகம், ஹதயோகம் ஆகிய மூன்றைவிட உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. | 37. | இப்படி உயர்வு, தாழ்வு எதுவும் இல்லை. எல்லாயோகங்களும் ஒன்றிணைக்கப்பட்டு பூரணயோகம் என்ற ஒரே யோகமாக மாற்றப்பட்டுள்ளது. |
| 38. | மேலே உள்ள சச்சிதானந்தத்திற்கு நேரெதிரான இருளில் மூழ்கியுள்ள விஷயமாகப் படைப்பு கருதப்படுகிறது. ஆகவே இந்த உலகத்திலிருந்து விடுபட வேண்டும் என்பது லட்சியமாகக் கருதப்படுகிறது. | 38. | அறியாமைஎன்பது சச்சிதானந்தத்தில் உள்ள அறிவைவிட உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஜடத்திற்குள் ஒளிந்திருக்கும் சச்சிதானந்தத்தை வெளிக்கொண்டுவருவது நோக்கமாக எடுத்துக்கொள்ளப் -படுகிறது. |
| 39. | ஆன்மீகச் சித்திக்காக எண்ணற்ற மந்திரங்கள் உருவாக்கப்பட்டு இருந்தன. | 39. | ஸ்ரீ அரவிந்தர் மற்றும் அன்னையின் திருநாமங்களும், தங்கள் திருவுள்ளம் நிறைவேறட்டும்என்ற மந்திரமும்தான் இங்கே பயன்படுத்தப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| 40. | பகுதி முழுமையைவிட எப்பொழுதும் சிறியது. | 40. | பகுதி முழுமையைவிட பெரிதாவதற்குரிய சந்தர்ப்பம் உண்டு. சைத்தியப்புருஷன் பகுதியாகும். ஆனால், அது வெளிவரும்பொழுது மற்ற பர்சனாலிட்டி பாகங்களைவிட இது பெரிதாக இருக்கும். |
| 41. | ஆன்மாவிற்கு எதிராக இருப்பதால் உடம்பை நாம் கைவிட வேண்டும். | 41. | உடம்பை ஆண்டவனின் இருப்பிடமாகச் செயல்படும் அளவிற்கு மாற்றி தெய்வீகமயமாக்க முடியும். |
| 42. | மேலுலகத்திலிருந்து பூவுலகிற்கு கீழே மனிதனை அனுப்பியதால் ஆண்டவன் மனிதனை விலக்கி விட்டதாகத் தெரிகிறது. | 42. | மனிதன் அகந்தையை உருவாக்கிக்கொண்டு செயல்படுவதால் இவன்தான் ஆண்டவனைவிட்டு விலகி நிற்பதாகத் தெரிகிறது. |
| 43. | கடந்தகாலம்என்பது நம் வாழ்வை பெருமளவிற்கு நிர்ணயிக்கிறது. | 43. | சைத்தியப்புருஷன் வெளிப்படும்பட்சத்தில் நிரந்தரமாக நாம் நிகழ்காலத்திலேயே இருக்கலாம். சைத்தியம் செயல்படும்பொழுது கடந்த காலம் நொடிப்பொழுதில் மறையும். |
| 44. | இறைவனும் படைப்பும் வேறுவேறு என்பதால் காலமும், காலம் கடந்த நிலையும் வெவ்வேறாக உள்ளன. | 44. | படைப்பிற்குள்ளேயே இறைவன் இருப்பதால் காலமும், காலம் கடந்த நிலையும் என்றிரண்டும் சேர்ந்து இருக்கும் நிலையுமுண்டு. |
| 45. | கிரகங்களும், நட்சத்திரங்களும் நம் வாழ்வை நிர்ணயிக்கின்றன. | 45. | உள்ளிருக்கும் இறை சாந்நித்தியத்தைக் கண்டுபிடித்து அதிலிருந்து செயல்படும்பொழுது கிரகங்களையும், நட்சத்திரங்களையும் முறியடித்து மனிதன் தன் தலைவிதியைத் தானே நிர்ணயித்துக்கொள்கிறான். |



| | | | |
|---|---|---|---|
| 46. | ஆண்டவன் கருணை நிறைந்தவன் என்பதைவிட கண்டிப்பு நிறைந்த நீதிபதியாகத்தான் இருக்கிறான். | 46. | ஆண்டவனின் அன்பும், கருணையும்தான் இந்த உலகத்தைக் காப்பாற்றி வருகிறது. அவன் நீதிபதியாகச் செயல்பட்டால், அவன் வழங்கும் நீதியை இவ்வுலகம் தாங்காது. |
| 47. | ஒரு புனிதத் தோற்றம் மிகவும் அவசியம். ஆகவே, ஜடா முடி தரித்து, காவி அணிந்து காட்சி அளிக்க வேண்டும். | 47. | தோற்றத்திற்கு முக்கியமில்லை. ஜடா முடி தரித்தலோ, மொட்டையடித்தலோ புனிதத்தின் அடையாளம் ஆகாது. |
| 48. | உண்மை மாறாமல் என்றும் அப்படியே இருக்கும்என்று கருதப்படுகிறது. இதனால் புதிதாகக் கண்டறியக்கூடிய உண்மைகள் பழைய உண்மைகளுக்கு எதிரானதாகக் கருதப்பட்டு நிராகரிக்கப்படு-கின்றன. | 48. | தற்பொழுது நிலவுகின்ற உண்மைகள் தற்காலிகமானவைதாம். புதிய உண்மைகள் தெரியவரும்பொழுது பழைய உண்மைகள் விலக வேண்டும். |
| 49. | இறை விரோத சக்திகள் என்றுமே நிலைத்திருக்கும். | 49. | அவை தேவைப்படும் வரையிலும்தான் அவை இருக்கும். தேவையில்லை என்ற கட்டம் வரும்பொழுது இறைவனின் பக்கம் சாதகமாகமாறி வந்துவிடும். அல்லது இவையெல்லாம் அழிந்துவிடும். |
| 50. | ஆண்டவனிடம் பயமிருந்தால்தான் மனிதன் ஒழுங்காக இருப்பான். | 50. | ஆண்டவனைக் கண்டு அஞ்சுவதற்கு பதிலாக ஆண்டவன் மேல் அன்பு வைத்து உறவாடினால்தான் ஆண்டவனை நெருங்க முடியும். |

❀ ❀ ❀

**குரு சிஷ்யனை அவனுடைய ஆத்மாவுடன் தொடர்பு கொள்ள உதவுகிறார். சிஷ்யனை சத்புருஷன்வரை (Supreme) அவரால் அழைத்துச் செல்ல முடியும். எல்லாக் குருவாலும் அது முடியாது**

***(Agenda, Vol.IV, P.217,218)***

✡ சிஷ்யனைப் பொருத்தவரை குருவேயெல்லாம்.

மனிதனைப் பொருத்தவரை ஆத்மாவே அனைத்தும்.

✡ விஷ்ணு லீலி பகவானுக்கு மௌனப் பயிற்சியளித்தார். அதன் பின் பகவான் ஆத்ம விழிப்புப் பெற்று (inner voice) அசரீரியால் வழிநடத்தப் பெற்றார். அப்பொழுது பகவானை சந்தித்த விஷ்ணு லீலி பகவானைப் பேய் பிடித்துள்ளது என்றார்.

✡ சிஷ்யன் எளிய மனிதன். அவன் குருவைமட்டும் கருதுவது நல்லது. குருவை மீறமுயல்வது அகங்காரம். அது அவனுக்கு அழிவைத் தரும்.

மனிதன் பெரிய ஆத்மா. அவனுக்கு ஆத்மவிழிப்புவரும்வரை குரு அவசியம். ஆத்மவிழிப்பு பெற்றபின் அவன் குருவை விட்டகலாவிட்டால் அவனுக்கு யோகம் பலிக்காது.

***தன் நிலையை உண்மையாக அறிந்தவனுக்குத் தவறு வாராது.***

✡ Paul Brunton பால் பிரண்டன் என்ற ஆங்கிலப் பத்திரிகை நிருபர் குருவைத் தேடி இமாலயம் முழுவதும் பிரயாணம் செய்தார். அவர் கண்ட குருமார்கள்,

- ❒ ஏதோ ஒரு வகை சித்தி பெற்று, அதையே முடிவாகக் கருதுபவர்கள்.



- ❒ சித்தியில் ஒரு நிலையடைந்தாலும், மனவளர்ச்சி-யற்றவர்கள்.
- ❒ சித்தி என்பதின் வகைகள் ஏராளம். நிலைகள் 20 அல்லது 30 ஆகும்.

  வரிசைக்கிரமமாகக் கூறினால்

  மௌனம்பெற்ற முனி அல்லது தவசி,

  திருஷ்டி பெற்ற ரிஷி,

  ஞானம் பெற்ற யோகி.

  ஒவ்வொன்றிலும் 10 அல்லது 50 நிலைகள் உள்ளன.
- ❒ யோகத்தை அடையும் மார்க்கத்தைப் பொறுத்து சித்தி பலிக்கும்.

  கர்மம், பக்தி, ஞானம், லயம், மந்திரம், தந்திரம்போன்ற எண்ணற்ற மார்க்கங்களுண்டு.
- ❒ தம் குரு பெற்ற சித்தியைப் பெற்றவருண்டு.

பிரண்டனுக்கு எந்த குருவும் சரி வரவில்லை. தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தில் காஞ்சியில் பரமாச்சாரியாரைக் கண்டு, அவரை ஏற்றுக்கொண்டார். பரமாச்சாரியார் ''எனக்குரியது யோகமில்லை'' எனக் கூறி, அவரை ரமண மகரிஷியிடம் அனுப்பினார். தம்மை நாடி வந்த சிஷ்யனை அடுத்தவரிடம் அனுப்புவதற்கு ஆன்மீக அடக்கமும், உண்மையும் வேண்டும்.

✡ குருவைப் பொறுத்து, சிஷ்யனைப் பொறுத்து, யோக லோகத்தைப் பொறுத்து குரு சிஷ்யனுக்கு உதவ முடியும்.

திறமையுள்ளவனுக்கு குரு பெரிய உதவி செய்ய முடியும்.

அவன் தன் திறமையை நம்பாவிட்டால், தன்னைக் கடந்து உயரும் உதவியையும் செய்ய முடியும்.

தமிழ்நாட்டு அரசியலில் 1967 வரை ஆயிரம் பெரிய மனிதர் வந்தனர். இராஜாஜி, காமராஜ், வெங்கட்ராமன், சுப்ரமணியம் வரை டெல்லியில் வந்து சிறப்பெய்தினர். மற்றவர்

சென்னையோடு அரசியலை முடித்துக்கொண்டனர். காந்திஜீ நேருவை தம்மைக் கடந்த உயர்வை எட்ட உதவினார். அதே உதவியை அவரால் மற்றவர்கட்குச் செய்ய முடியவில்லை. இராஜாஜியைத் தம் வாரிசு என்றார். 10 ஆண்டில் அது மாறியது. பட்டேலை அவர் பிரதமராக்கப் பிரியப்படவில்லை. சுபாஷ் சந்திர போஸை காந்திஜீ எதிர்த்தார். காமராஜை காந்திஜீ ஏற்கவில்லை.

**குருவுக்கு சிஷ்யன் அமைவதும், சிஷ்யனுக்கு குரு அமைவதும் திருமணம்போல் பூர்வஜென்மப் பலன். அன்னையை உண்மையாக ஏற்றால் அதுவும் மாறி அன்னை பலன் வரும்.**

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எண்ணத்தைச் சமர்ப்பித்தால் எண்ணத்தின் பின்னாலுள்ள ஜீவியம் செயல்பட ஆரம்பிக்கும்.

***ஜீவியம் செயல்படும் சமர்ப்பணம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உணர்ச்சியைச் சமர்ப்பணம் செய்தால் அதன் பின்னணியில் உள்ள ஜீவியம் தானேசெயல்படும். செயலைச் சமர்ப்பணம் செய்தால் உடலின் ஜீவியம் செயல்படும்.

***உடலின் ஜீவியம் செயல்படும் விதம்.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**969) ஜபத்திற்குப் பலனிருப்பதற்கு முக்கியக் காரணம் அது உடலில் ஜீவியத்தை திரும்பத் திரும்பச் சொல்வதால் செறிந்த நிறைவு செய்வதாகும்.**

***உடலின் செறிந்த நிறைவு ஜபத்திற்குப் பலன் தரும்.***

தலை சீவுவது பழக்கம். கடிதத்தில் தேதி போடுவது ஒரு பழக்கம். சிறு வயதிலிருந்து தினசரி தலை சீவுகிறோம். பல ஆயிரம் முறை செய்தசெயல் பழக்கமாகிவிட்டது. ஒரு நாள்கூட தலை சீவ மறந்து வெளியில் போனதில்லை.

- ✯ பழக்கம் தவறாமல் செயல்பட பல்லாயிரம் முறை திரும்பத் திரும்பச் செய்ய வேண்டும்.

கடிதத்தில் தேதி போடுவது நல்ல பழக்கம். பெரும்பாலோர் செய்வார்கள். சிலர் செய்வதில்லை. ஒரு முக்கியப் பிரச்சினை எழும்பொழுது தேதி என்னஎன்ற கேள்வி வரும். அப்பொழுது தேதியில்லாவிட்டால், கடிதம் கூறும் பெரிய செய்தி முடிவு எடுக்கப் பயன்படாது. இதை இனித் தவறாமல் செய்யவேண்டும்என ஒரு முடிவு எடுத்து எந்தக் கடிதத்திலும் தேதி போடுவேன். பிறர் என்னைச் சில சமயம் கேலி செய்வார்கள். எந்தக் கோர்ட்டில் வாக்குமூலம் கொடுக்க இந்தக் கடிதம் தேவை? என்பார்கள். நான் கடிதம் எழுதும் போது வருபவர்கள் என்னைக் கேலியாகப் பார்த்து தேதி போட்டிருக்கிறதாஎன்பார்கள். பல சமயம் போட்டிருப்பேன். சில சமயம் மறந்துபோகும். கடிதத்தை முடித்தபின் சில சமயம் நினைவுக்குவரும். தபாலில் போட்டபிறகு நினைவுக்குவரும். முக்கியமான விஷயங்களை எழுதி வைக்கும் பழக்கம் நமக்கில்லை. நினைவை நம்ப முடியாது. 50 அல்லது 60 டெலிபோன் நம்பரை நினைவில் வைத்துக்

கொள்பவருக்கும் சில நம்பர் மறந்துபோகும். சில செய்திகள் தவறாக நினைவிருக்கும்.

- ★ பிடிக்காத விஷயம் மறந்துபோகும்.
- ★ கொடுத்த பணம் தவறாக அதிகமாக நினைவிருக்கும்.
- ★ நினைவை நம்ப முடியாது, எழுத்தை நம்பலாம்.

1950க்குமுன் இரயில் வருவதைப் பார்த்து கடிகாரத்தைத் திருத்துவார்கள். எப்படி நேரத்தில் இரயில் வரும்? இன்ஜின் 8 மணிக்கு ஸ்டேஷனுக்கு வர வேண்டுமானால் 7.30க்கு ஒர்க்ஷாப்பில் தயாராக இருக்கும். டிரைவர் 7.00 மணிக்கே வந்திருப்பார். அவருக்கு நினைவுபடுத்த 6.00 மணிக்கு ஆள் வீட்டிற்குப் போவான். அதை நம்பாமல் 5.30க்கு முதல் ஆளும் தினமும் அனுப்பும் ஏற்பாடுண்டு. அதனால் இரயில் நேரத்தில் வருகிறது. பழக்கம் படிய பல நாளாகும்.

ஜபம் மணிக்கணக்காக, நாள் கணக்காகச் செய்வதுண்டு. *ஓம்* உச்சரிப்பதை 1½ கோடி முறை உச்சரிக்கச் சொல்வார்கள். அன்னைக்கு 3 நாள் பிரார்த்தனை செய்யும்படி நான் கூறுகிறேன். அத்துடன் அன்னை கூப்பிட்டவுடன் வருவார். கூப்பிடாமலே வருவார். ஒரு குரல் அவர் காதில் விழுந்தால் போதும்என்றும் நான் எழுதுகிறேன். இவையெல்லாம் அன்னை கூறுபவை. பகவான் கூறுபவை. பரம்பரையாக இந்தியரும், மற்றவரும் அறிந்தது. நம் மனம் அலைபாயும். கட்டுப்படுத்த முயன்றால் கட்டு மீறிப்போகும். அன்னையை அழைக்க சில நாட்களில் முடியும். பல நாட்களில் மனம் ஒத்துழைக்காது. சில சமயம் மனம் விழிப்பாகத் தயாராக இருக்கும். அப்பொழுது பிரார்த்தனை உடனே பலிக்கும். அப்படியின்றி அலைபாயும் நேரங்களில் மணிக்கணக்காக அன்னையை அழைத்தாலும் எரிச்சல் வரும், பலனிருக்காது.

- ★ **ஒரு குரல் அன்னையை எட்ட 1 மணி அழைக்க வேண்டும்.**
- ★ **1 மணி அழைக்க 3 நாள் முயன்றால் அந்த ஒரு மணி தேறும்.**
- ★ **பிரச்சினை ஆழத்திலிருந்தால், அழைப்பு மேலிருந்தால் பலிக்காது.**



- ★ **பிரச்சினையின் ஆழத்திற்கு அழைப்பு போய், அங்கிருந்து 1 மணி அழைத்து, அதில் ஒரு குரல் அவர் காதில் விழுவது பலன் தரும். இதுவே ஜபம்.**

❀ ❀ ❀

**970) பரிசுத்தமானவனை, சுத்தம் குறைந்தவன் துரோகம் செய்கிறான்என நாம் நம்புவது உண்மையன்று. உண்மையில் ஒரு வகையான குறையை அடுத்த வகையான குறைவு சந்திக்கிறது. நிலைமை தெளிவாக உள்ளது. குருட்டு அகங்காரம் தன் பெருமையை இவ்வகையில் நிலைநிறுத்த முயல்கிறது.**

***வேறுபட்ட குறைகளை நல்லது கெட்டதுஎன்கிறோம்.***

**971) குறைவே குறையைச் சந்திக்கும். பரிசுத்தம் குறையைச் சந்திக்க இயலாது. ஒன்றை அடுத்தது தொடும் இடமில்லை.**

***குறைவே குறையைச் சந்திக்கும்.***

வாழ்க்கை வாழ்வதற்கே, தத்துவம் பேசுவதற்கில்லை. இலட்சியத்திற்கும் வாழ்வுக்கும் என்ன தொடர்பு? இலட்சியத்தைப் பேசலாம், எழுதலாம், வாழ முடியாதுஎன தீர்மானமாக நம்புபவர்கள் உண்டு. அவர்களாக இலட்சியத்தை நினைப்பதில்லை. இவர்கள் வாழ்வு சிறப்பானதாக இருக்கும். இவர்கட்கு நல்லது, கெட்டது என்பதில்லை. நடப்பது நல்லது, நடக்காதது கெட்டது. இவர்கள் உணர்வால் வாழ்பவர்கள். தவறானவர்கள்என்று பொருளில்லை. தவற்றை அனைவரும் ஏற்றுக்கொண்டால் அதுவும் நல்லதே, என இவர்கட்கு மனப்பான்மையுண்டு. மனச்சாட்சியில்லை. சமூகம் உருவாகும்பொழுது பாதிக்கு மேற்பட்டவர்கள் ஊர் என்ன சொல்கிறதுஎனக் காத்திருப்பார்கள். எது சொன்னாலும் ஏற்றுக்

கொள்வார்கள். வாழ்க்கை தலைமைக்குத் தகுந்தாற்போல் மாறிக் கொள்ளும். இப்படிப்பட்டவர்களை வீட்டில், ஆபீசில், ஊரில், கட்சியில், பொதுக் காரியத்தில் முடிவு எடுக்குமிடத்தில் அனுமதிக்கமாட்டார்கள். ஊர் அவர்களைப் பச்சோந்திஎனக் கருதும். அவர்கட்குப் பணம் வந்துவிட்டால், அதையும் ஊர் சொல்லாது. நாட்டில் அடிக்கடி மாறுதல் வருவதுண்டு. 100 அல்லது 200 ஆண்டு மாறுதலில்லாமலிருக்கும். மாற்றமில்லாத காலத்து இவர்களில் சிலர் சுத்தமாக இருக்க முயல்வார்கள். ஓரிருவர் பரிசுத்தமாக இருக்க முயல்வார்கள். அவர்கட்கு எதிரி தண்டனை கொடுப்பான். எதிரி தவறாக இருந்தாலும் சுத்தமானவனுக்குத் தண்டனைவரும். ஊரே அதிர்ந்து போகும்.

***நல்லவனுக்குக் காலமில்லை***

என்று பேசும். இது போன்ற விஷயங்களில் தர்மமெது, நியாயம் என்ன? வாழ்க்கை நியதி எது?

- ✡ வாழ்க்கை நியதி வேறு, ஊரார் சட்டம் வேறு.
- ✡ ஊரார் சட்டம் பணம், அந்தஸ்து, ஜாதி, வலிமையைப் பொறுத்தது.
- ✡ அவையுள்ளவன் ஒருவருக்கு தவறு செய்தால் ஊர் தண்டிக்காது.
- ✡ அவை எதுவுமில்லாதவன் பரிசுத்தமானவனுக்குள்ள சிறு குறையை எடுத்து வம்பு செய்தால், வம்பு செய்பவன் பக்கம் ஊரார் பேசுவார்.
- ✡ ‘‘நான் குறையற்றவனாயிற்றே, எனக்கேன் தண்டனை’’ என்பது கேள்வி. தகராறு செய்யும் விஷயத்தில் அவனுக்குக் குறையில்லாவிட்டாலும், வீட்டு விஷயம், மனத்தைப் பொறுத்த வரையில் குறையிருந்தால் சுத்தமானவனுக்கு அது மூலமாகத் தண்டனை வரும். சுத்தம் குறைவானவனுக்கு தண்டனை வாராது.
- ✡ பரிசுத்தமானவன் மேலும் முன்னேறத் தடையான குறையை ஓர் அடாவடிக்காரன் தாக்கினால் பரிசுத்தமானவனுக்கு



அடுத்தவன் செய்வது சேவை.

***அவன் முன்னேற உதவும்.***

- ✡ சட்டம் மனிதர்களைப் பொறுத்து மாறும்.
- ✡ உயர்ந்தவனுக்கு குறை வெளியிலிருந்து வாராது.

உள்ளேயுள்ள குறை வெளியிலிருந்து குறையை ஈர்க்கும்.

அப்படி ஈர்ப்பதால் நல்லது நடக்கும்.

உள்ளே குறையில்லாவிட்டால், வெளியிலிருந்து குறை அவனைத் தொடமுடியாது.

குறையே குறையைச் சந்திக்கும்.

- ✡ அன்பர்கட்கு இது மிகவும் உண்மை.

எவருக்குமில்லாத கஷ்டங்கள் வரும்.

ஆனால் அருள் கவசம் போலிருப்பதால் தொந்தரவால் உயர்வு வரும்.

குறையிருந்தாலும் அன்பர்க்கு தண்டனை வாராது.

அன்னையை மறந்து மற்ற - பழைய - ஆதரவைத் தேடினால் தண்டனை வரும்.

எந்த நிமிஷம் அன்னை நினைவு வந்தாலும் அதே க்ஷணம் பிரச்சினை விலகும்.

அதனால் பெரிய நல்லது வரத் தவறாது.

❀ ❀ ❀

*தொடரும்....*

**ஜீவிய மணி**

**பிறரால் முடியாததை அவருக்குத் தருவது பெருந்தன்மை.**

# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய.*

ஸ்ரீ அன்னைக்கும் பகவானுக்கும் அநேக நமஸ்காரம். அப்பா அவர்கள் பொற்கமல பாதம் பணிந்து இக்கடிதம் எழுதுகிறேன். 2001ஆம் ஆண்டு தஞ்சாவூர் தியானமையம் மூலம் அன்னையை தெரிந்துகொண்டேன். அன்னையை ஏற்றுக்கொண்டபின் எத்தனையோ மாற்றங்கள் எங்களிடம் ஏற்பட்டுள்ளன. மார்ச் மாதம் 600 கிராம் வெயிட்டில் என் பெண்ணுக்கு 6 மாதத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. எடையும் குறைவாக உள்ளது, ஆறாவது மாதம் பிறந்துவிட்டது, அது பிழைக்காதுஎன டாக்டர்கள் முடிவு எடுத்துவிட்டார்கள். பின் தஞ்சாவூர் சென்டர்க்கு தினமும் போன் செய்து நானும் அவர்களும் பிரார்த்தனை செய்து, அன்னை அருளால் குழந்தை இப்பொழுது நன்றாக இருக்கிறது. அடுத்து, செப்டம்பர் 29ஆம் தேதி எனக்கு முதுகு தண்டுவடத்தில் ஆபரேஷன் நடந்தது. எனக்கு ஆபரேஷன் செய்ய பயமாக இருந்ததால் ஆறு மாதங்கள் யோசித்துக்கொண்டு தஞ்சாவூர்க்குப் போன் செய்தும் அன்னையிடம் பிரார்த்தனை செய்தும் ஒரு முடிவுக்கு வந்து ஆபரேஷன் செய்ய நினைத்து நாகர்கோவில் ஆஸ்பத்திரியில் சேர்ந்தேன். எல்லோரும் என்னிடம் சென்னையில் நன்றாகச் செய்வார்கள். அங்குச் சென்று செய்என்று சொன்னார்கள். நான் எங்கு இருந்தாலும் அன்னையும் பகவானும்தானே எல்லாம் செய்ய வேண்டும்என்று நினைத்து நாகர்கோவில் எங்களுக்கு பக்கமாகவும், ஆபரேஷன் பணச் செலவும் குறைவாக இருக்கும்என்பதால் அங்குச் சேர்ந்தேன். ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் செல்ல ஸ்டெரச்சர் வந்தபின்பு அன்னை, பகவானிடம் காணிக்கை வைத்து வேண்டிவிட்டு ஸ்டெரச்சரில் படுத்து, ஆபரேஷன் தியேட்டருக்குச் சென்றேன். எனக்கு ஆபரேஷனுக்கு general anasthesia முழுமயக்கமருந்து கொடுத்துவிட்டார்கள். ஆனால் மயக்கம் வந்தபிறகு மயக்க நிலையில் அன்னையும் பகவானும் மட்டும் ஆபரேஷன் தியேட்டரில் காட்சியாக



தெரிந்தார்கள். முதுகில் பட்டறையில் ஸ்குரு வைத்து ஓட்டை போடுவதுபோல் பயங்கரமான அதிர்வு முதுகுத் தண்டு முழுவதும் இருந்தது. வலி இல்லை. ஆனால் அதிர்வு முழுவதும் உணர்ந்த நிலையில் அன்னை பகவான் காட்சியுடன் கை, கால், வாய் எதுவும் அசைக்க முடியவில்லை. ஆனால் முதுகுத்தண்டில் அதிர்வு மிக அதிகமாகவும் அன்னை, பகவான் காட்சியாகவும் நன்றாக உணர முடிந்தது. இன்றும் என் மனக்கண்ணில் உணர முடிகிறது. வெளியே I.C.U.க்குக் கொண்டு வந்தவுடன் என் பெண் என்னைப் பார்க்க வந்தவுடன் அவளிடம் எனக்கு ஒன்றுமில்லை. ஆபரேஷன் தியேட்டரில் அன்னையும் பகவானும் கூடவே இருந்தார்கள்என்று சந்தோஷமாகக் கூறினேன். அவளுக்கு ஒரே ஆச்சரியம். அன்னையே இன்றும் எப்பொழுதும் எங்களுடனே இருந்து, எங்கள் குடும்பத்திற்கும், பெண்கள் குடும்பத்திற்கும் பாதுகாப்பும் துணையும் தந்து அருள வேண்டும். எத்தனைப் பிறவி எடுத்தாலும் அன்னை அன்பராகவே பிறக்க வேண்டும்.

அன்னைக்கு நன்றி.

*-- கல்யாணி, திருநெல்வேலி.*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பகவான் ''நான்'' என்ற சொல்லைப் பயன்படுத்துவது அரிது. பிற்காலத்தில் தம்மை ''ஸ்ரீ அரவிந்தர்'' எனவும் குறிப்பிட்டார்.

***பகவான் குறிப்பிட்ட ஸ்ரீ அரவிந்தர்.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## (29) நினைத்தது, நினைத்தவுடன் நடக்கும்

எல்லா அன்பர்களும் தவறாது ஏதோ ஓர் அளவில் இதைக் கண்டுள்ளனர்.

✡ ‘‘உங்களை இரயில்வே ஸ்டேஷனில் சந்திக்க நான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்குள் எப்படி நீங்கள் வீட்டிற்கு வந்து விட்டீர்கள்’’ என்று கேட்டதற்குப் பதிலாக இரயில் 15 நிமிஷம் முன்னதாக வந்ததுஎன விருந்தாளி பதில் கூறினார்.

✡ எழுபதுகோடி கடன் வேண்டும்என பாங்க் ஆப் அமெரிக்காவை வால்டர் கேட்டார். அவர் இந்தியக் கம்பனி SPICக்கு உரம் தயாரிக்கக் கேட்டார். ‘‘இரண்டு நாள் முன்னதாக நாங்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகட்கு உரம் தயாரிக்கக் கடன்தர எங்கள் ஆபீஸை இந்தோனேஷியாவில் திறந்துள்ளோம். நல்ல நேரத்தில் வந்தீர்கள்’’ என பாங்கு பதில் அளித்தது.

எண்ணம் மனதில் தோன்றி, எழும் கேள்விகட்கு பதிலளித்து, வரும் சந்தேகங்களைக் கடந்து, செய்ய உறுதி ஏற்பட்டு, செய்வதில் தெளிவு எழுந்து நாள்பட்டால் அந்த எண்ணம் மனத்தில் ஆழத்தில் போய் உறையும். அந்த நிலையில் அதைச் செய்ய எழுந்தால் காரியம் பூர்த்தியாகக் கண்முன்னே காட்சியளிக்கும்.

✡ நெடுநாள் தயாரானது நமக்குத் தெரியாததால் உடனே நடந்ததாக நினைக்கிறோம்.

✡ ஆத்மாவில் தெளிவிருந்தால் தேஜஸ் எழும். அது நெடுநாள் வேலையை சில நிமிஷங்களில் முடிக்கும். அது அருள் செயல்படுவது. அருள் வேகமாகச் செயல்படும். ஆனால் எல்லாக் கட்டங்களையும் பூர்த்தி செய்யும். எந்தக் கட்டத்தையும் தவறவிடாது.



✡ இதை நாம் காலம் சுருங்குவதாக எடுத்துக்கொள்கிறோம்.

✡ மனத்தின் எண்ணம் உடலை அடைந்ததாக எடுத்துக் கொள்ளலாம்.

✡ நேரம் வந்துவிட்டதுஎனச் சொல்வார்கள்.

✡ நேரத்தை அன்னை வரவழைத்தார்என நாம் கூறுகிறோம்.

> பொதுவாக நல்ல காரியம் இப்படி நடப்பதில்லை.
>
> அன்பர்க்கு நல்ல காரியங்கள் இதுபோல் அரிதாக நடக்கும்.
>
> அப்படி நடப்பதைக் காண்கிறோம்.
>
> *பாலிடெக்னிக் அட்மிஷனுக்கு மரத்தடியில் காத்திருந்தவன் கல்லூரியில் சேர்ந்து இன்ஜினீயராகி வெளிநாட்டுப் பயிற்சி பெற்று தொழிலதிபரானதையும் கண்டோம்.*

அப்படி நடப்பது, அன்னை அழைப்பது - அன்னை நமக்கு யோகத் தகுதியுண்டுஎன அறிவிப்பது.

யோகத்தை ஏற்றால் அன்னைக்குரியவராவர்.

இந்தச் சட்டம் புரிந்தால் காரியம் இதுபோல் நடப்பதைக் காணலாம்.

யோகத்திற்கு அழைப்புப் பெற 10 அல்லது 20 ஜென்மப் புண்ணியம் தேவை.

அன்னையை ஆத்மாவில் ஒருமுறை நினைப்பதற்கு அப்பலன் உண்டு.

> **நினைத்தது நினைத்தவுடன் நடப்பது யோகவாயில் திறந்து அழைப்பு காதில் விழுவது.**

## (30) தவறாத பிரார்த்தனை

அனைவருக்கும் பிரார்த்தனை பலிக்கும். எல்லாப் பிரார்த்தனைகளும் பலிக்கும்என்று சொல்லமுடியாது. சில சமயங்களில் அப்படிப் பலிக்கும். சில சமயங்களில் அப்படியிருக்காது. நாம் அதைப் பொருட்படுத்துவதில்லை. காரணங்கள் பல்வேறு வகைகளாக இருக்கும். அதில் முக்கியமானது நமக்குத் தவறும் பிரார்த்தனையில் அக்கரையிருக்காது. எல்லாப் பிரார்த்தனைகளும் பலித்து என்ன ஆக வேண்டும்என்று மனம் கேட்கும். அதுவே உண்மை. பஸ்ஸுக்குப் போகும்பொழுது பஸ் தவறிவிடுகிறது. துறைமுகத்தை விட்டுப் போன கப்பல் பிரார்த்தனையால் திரும்பி வந்து பிரயாணியை ஏற்றிக்கொண்டு சென்றதுஎனப் படித்திருக்கிறோம். ஏன் இந்த பஸ் என்னை வந்து ஏற்றிக்கொண்டு போகக்கூடாதுஎனக் கேட்பதில்லை. இந்த பஸ் போனால் அடுத்தது வரும்என்பது முடிவு. பிரார்த்தனை பலிக்காததற்குப் பல காரணங்கள் உண்டு.

1) நமக்குப் பிரார்த்தனையில் அக்கரையில்லாதது.
2) இதேபோன்ற காரியம் செய்தபொழுது நாம் அதைக் குறையாக வைத்தது.
3) விஷயத்தில் சம்பந்தப்படாத நபர் ஒருவர் வழியாக நாம் இதைச் செய்ய வேண்டி வரும்பொழுது அவர் மீது நமக்குள்ள எரிச்சல்.
4) வேலை முடியத் தேவையான அம்சம் ஒன்று இல்லாமலிருப்பது.
5) காலம் தவறி காரியம் செய்ய முனைவது.
6) செய்யும் வேலையைப்பற்றி முழுவதும் தெரியாதது.
7) காரியம் ஆரம்பிக்குமுன், பலனை எதிர்பார்ப்பது.
8) தகுதிக்கு மீறிய காரியத்தில் ஈடுபடுவது.
9) நாம் செய்யும் காரியத்தில் நமக்கு முக்கியமானவர் எதிரியாக இருப்பது.
10) முன்யோசனையின்றி அவசரப்பட்டு ஆரம்பிப்பது.



11) அவசரம் அதிகமாக நம்மை ஆட்கொள்வது.
12) பிடிக்காத காரியத்தை மேற்கொள்வது.
13) பிடிக்காத காரியம் கூடிவரக்கூடாதுஎன்று நாமே நினைப்பது.
14) முக்கியமானவர் முக்கியமாகச் சொல்வதைமீறி காரியம் செய்வது.
15) பிறர் காரியம் கெட மனம் விழைவது.
16) போட்டி.
17) பொறாமை.
18) பிடிவாதம்.
19) சவால்.
20) தேவையற்றதைச் செய்வது.
21) நம்மைவிடப் பெரிய சக்திகளைப் பெருமைக்காக எதிர்க்க முனைவது.

இதுபோல் மேலும் 20 காரணங்களை எழுதலாம். பொதுவாகப் பிரார்த்தனை செய்பவர் குறைவு. ஒரு காரியம் முடியவில்லையெனில் அதை விட்டுவிடுவதும் வழக்கம். பிரார்த்தனையில் 10இல் 5 பலித்தால் அது சக்தி வாய்ந்த தெய்வம். இன்று அளவு கடந்து பிரபலமான கோயில்களில் 10 பிரார்த்தனைகளில் 3 அல்லது 4 பலிக்கும். 10 பிரார்த்தனைகளில் ஒன்று பலித்தாலே கோயில் பிரபலமாகும்.

*எல்லாப் பிரார்த்தனைகளும் பலிக்கும்என எவரும் எதிர்பார்ப்பதில்லை.*

ஒரு கோயிலில் பலிக்காவிட்டால் அடுத்த கோயிலுக்குப் போவார்கள். எந்தக் கோயிலிலும் பலிக்காத பிரார்த்தனை அன்னையிடம் பலிப்பதை அனைவரும் அறிவோம். அப்படியும் பல காரணங்களால் ஒருசில பிரார்த்தனைகள் தவறும். அதுபோல் ஒரு பிரார்த்தனையும் தவறாமல் ஒருசிலருக்குப் பலிக்கும். அவர்கள் பிரார்த்தனையைக் கடந்தவர். அவர்கட்குப் பிரார்த்தனை

தேவையில்லை. எல்லாப் பிரார்த்தனைகளும் பலித்தால், அவர்கள் யோகத் தகுதியுள்ளவர். அவர்கள் யோகத்தை மேற்கொண்டால் பலிக்கும். அதையே நான் இப்பகுதியில் பூரணயோகவாயில்எனக் கூறுகிறேன்.

10 பிரார்த்தனைகளில் எனக்கு ஒன்று பலிக்கவில்லை என்பவர் யோகத் தகுதியற்றவர். அவர் பலிக்காத பிரார்த்தனை பலிக்கும் முயற்சிகளை எடுத்தால், தடை வளர்ந்தபடியிருக்கும். புதுச் சிரமங்கள் எழும். ஒருவேளை பலித்துவிட்டால், ஏற்கனவே பூர்த்தியாக இருக்கும் விஷயம் கெட்டுவிடும்.

*எல்லாப் பிரார்த்தனைகளும் தவறாது பலிப்பது யோகத் தகுதி பெறுவது.*

இதுபோன்ற முயற்சியைச் செய்யும்பொழுது இதுவரை நம் வாழ்விலில்லாத தடைகள் எழும்.

மேலும் முயன்றால் இதுவரை எவருக்குமில்லாத தடையெழும். பிடிவாதத்தைத் தொடர்ந்தால் மேலும் முயற்சிசெய்ய முடியாத நிலை வரும். யோகத் தகுதி பெரியது. அனைவருக்கும் கிட்டாதது.

## (31) தவற்றை விரும்பி திரும்பத் திரும்பச் செய்த பின்னும் முழுப்பலன் வருவது

இது மன்னிக்க முடியாத குற்றமாக நாம் அறிவோம். ஆனால் நாம் செய்வதில் பாதி இத்தலைப்பின்கீழ் வரும். தவறு ஒன்றே, தோற்றம் மாறுபடும். எந்தத் தவறு ஆபத்தை விளைவித்ததோ, அதிலிருந்து தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டபின் மீண்டும் அதே தவற்றை அதேபோல் செய்வது விலக்கன்று, விதியெனக் கூறாவிட்டாலும் பரவலாகக் காணப்படுவது.

- ❒ வாழ்வில் அத்தனைத் தவறுகளும் தவறாமல் ஆபத்தில் முடியும். வேறு முடிவு அதற்கில்லை.



- ❒ அன்பர்கள் பல சமயம் அதிலிருந்து காப்பாற்றப்படு-வார்கள்.
- ❒ ஒரு முறை ஓர் அன்பர் அப்படிக் காப்பாற்றப்பட்டாலும் அவருக்கு யோகம் செய்யும் வாய்ப்புண்டு.

- ☆ இலட்சியவாதி வெள்ளைப்பணத்தை மெனக்கெட்டு கறுப்புப் பணமாக மாற்றினார்.
- ☆ பெருமுதலை பாதாளத்தில் கொட்டியவர் தாமே தம்மை அழித்துக் கொண்டதைக் கண்டு நொந்தார். அடுத்தவர் பிரார்த்தனையால் அத்தனையும் தப்பிப் பிழைத்தது. பணம் காப்பாற்றப்பட்ட அதேநாள் மீண்டும் அதையே செய்தார். மீண்டும் அடுத்தவரால் காப்பாற்றப்பட்டது.
- ☆ டார்சி எலிசபெத்தை மணக்கும்படி கேட்கும்பொழுது அவள் குடும்பம் தாழ்ந்ததுஎனக் கூறியதால் அவள் திட்டினாள். அவளுடைய குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க எழுதிய கடிதத்தில் அவள் குடும்பம் எவ்வளவு தாழ்ந்ததுஎன விளக்கமாகக் கூறுகிறான்.
- ☆ அன்பர் அறிவில்லாமல் செயல்பட்டு ஆபத்தை அறைகூவி அழைக்கும்பொழுதெல்லாம் அன்னை அடுத்தவர் மூலம் ஆபத்தை விலக்குகிறார். நிலைமையை மாற்றி ஆபத்தை வாய்ப்பாக மாற்றுகிறார், சட்டத்தை மாற்றி நிலைமையைக் காப்பாற்றுகிறார்.

மனிதன் சிறுவட்டத்திற்குள் செயல்படுகிறான்.

அன்னை வட்டத்தைப் பெரியதாக்கி அவன் அறியாமைக்கு எதிராகச் செயல்பட்டுக் காப்பாற்றுகிறார்.

அருளும் அதேபோல் செயல்படக்கூடியது.

அன்னையும், அருளும் சேர்ந்து செயல்படும்பொழுது தவறாமல் பலன் உண்டு.

அன்னை எல்லாச்சமயங்களிலும் இதுபோல் செயல்பட்டு ஆபத்தை விலக்குவதில்லை.

☆ சில முக்கியஸ்தர்கள் சேர்ந்து ஸ்தாபனத்தில் செயல்படும் பொழுது ஒருவர் ''இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. நான் சேரமாட்டேன்'' என்றார். அவர் முக்கியஸ்தர்என்பதால் அவருடைய எதிர்ப்பால் காரியம் முழுவதும் கெட்டுப்போகும். காரியம் ஜெயித்தது. பலனில் பங்குகொண்டார்.

அடுத்த பெரிய காரியம் ஆரம்பிக்கும்பொழுது, ''இதெல்லாம் வீண்வேலை. நான் எதிர்க்கிறேன்'' என்றார். மீண்டும் அவர் எதிர்ப்பைமீறி பெரும்பலன் வந்தது. அந்த ஸ்தாபனம் செய்த எல்லா முக்கிய வேலைகளையும் இவர் எதிர்த்தார். இவர் எதிர்ப்பைமீறி பெரும்பாலான திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறின. முடிவாக தன் போக்கை மாற்றிக்கொள்ளாமல் அவரே தனியாக அதுபோன்ற திட்டங்களை அமுல்படுத்த முயல்கிறார். அவருக்குத் தோல்வி கிடைத்தால் முறை முக்கியம் எனப் பொருள். வெற்றி கிட்டினால் அவருடைய கோணல் போக்கைவிட ஆத்மா பெரியது; யோகம் செய்தால் பலிக்கும் எனப் பொருள்.

☆ தவறு செய்வதை ஒரு முறையாகக் கொண்டவர் சில சமயங்களில் வெற்றி பெறுவதுண்டு. அபூர்வமாக எல்லாச் சமயங்களிலும் வெற்றி பெறுவதுண்டு.

**தவற்றைமீறி எழும் வெற்றி பெறுபவருக்கு யோகத் தகுதியுண்டுஎனப் பொருள்.**

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இனிய உறவும் பாசமும் அன்னையை ஏற்றுக்கொண்ட பின் இனிமையாக இருக்காது; விரசமாகவுமிருக்கும்.

***இனிமையின் விரசம்.***





# ஜாதிமல்லி

சமர்ப்பணன்

ஒரு வாரமாகவே தேவிகாவின் முகம் வாடி இருந்தது. 'என்ன விஷயம்' என்று கேட்டு அவளை மலரச்செய்ய வேண்டும்என்று குமரனுக்கு ஆர்வம் இருந்தாலும், கேட்க சிறிது தயக்கமாக இருந்தது.

அவள் பாட்டுக்கு 'புதிய நகை வேண்டும், பட்டுச் சேலை வேண்டும், உங்கள் அம்மாவோடு பேசுவதை குறைத்துக்கொள்ள வேண்டும்' என்பது போன்ற வில்லங்கமான கோரிக்கைக் கணைகளைத் தொடுத்தால் என்ன செய்வதுஎன்ற பயம்தான் தயக்கத்திற்கான காரணம்.

மனைவியின்மீது உண்மையான பிரியம் கொண்ட எந்தக் கணவனால் அவள் முகவாட்டத்தை நாட்கணக்கில் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அதனால் எல்லாம்வல்ல இறைவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, சனிக்கிழமை மாலையில் தேவிகா காபி தரும்போது குமரன் மெல்ல பேச்சை ஆரம்பித்தான்.

''காபி பிரமாதமாக இருக்கிறது'' என்றான் குமரன்.

''இன்னமும் குடிக்கவே ஆரம்பிக்கவில்லை?'' முறைத்தாள் தேவிகா.

''நீ போடும் காபி எப்போதும் பிரமாதமாகத்தான் இருக்கும். உன் முகம் வாடி இருப்பதைப் பற்றிய கவலையில், ஏதோ சொல்லி விட்டேன்'' என்று சமாளித்தான் குமரன்.

''பரவாயில்லையே, என் முகத்தைகூட நீங்கள் ஏறெடுத்து பார்க்கிறீர்களே'' என்றாள் தேவிகா.

''என்ன இப்படிச் சொல்லிவிட்டாய்? நான் போன பிறவியில் தெரியாத்தனமாக செய்துவிட்ட சில புண்ணிய காரியங்களினால் தான் நீ எனக்கு இந்தப் பிறவியில் மனைவியாக வந்திருக்கிறாய்.

என் குறைகளை எல்லாம் திருத்துகிறாய். எனக்காக என்னவெல்லாம் செய்கிறாய். சரி, அதைவிடு, உன் கவலை என்ன? அதைச் சொல்'' என்று தண்மையாகப் பேசினான் குமரன்.

'வெண்ணிலா நேரத்திலே வேணுகானம் - மேல்மாடி முற்றத்திலே நீயும் நானும், கண்ணா, கண்ணா' என்ற இசைப்பாடல் எங்கிருந்தோ மெல்லியதாகக் கேட்டுக்கொண்டிருந்தது. பாடலைச் சிறிது நேரம் கவனித்த தேவிகா, ''நான் போன வாரம் முப்பது ரூபாய் பெறுமானமுள்ள விஷயத்தில் ஏமாந்துபோய்விட்டேன்'' என்று சொன்னாள்.

''என்ன நடந்தது?'' என்று குமரன் கேட்டான்.

''வழக்கமாக நம்மிடம் பழைய பேப்பர் வாங்கும் பெரியவர் வேறு ஊருக்குப் போய்விட்டார். அதனால், போன வாரம் செந்தில் என்ற புதிய பையனிடம் முப்பது ரூபாய்க்கு பழைய பேப்பரை விற்றேன். 'என்னிடம் நூறு ரூபாயாக இருக்கிறது. உங்களிடம் சில்லறை இருக்கிறதா?' என்று கேட்டான். 'இல்லை' என்று சொன்னேன். 'மாற்றிக்கொண்டு வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் பேப்பரையும் எடுத்துக்கொண்டு போனான். போனவன் இன்னமும் திரும்பவே இல்லை'' என்று விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னாள் தேவிகா.

''போனால் போகிறது. முப்பது ரூபாய்தானே? இதற்காகவா இப்படிக் கவலைப்படுவது?'' என்று ஆறுதல் சொன்னான் குமரன்.

''முப்பது ரூபாய் பணத்திற்காக முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளும் குடும்பத்தில் பிறந்தவள் என்றா என்னைப்பற்றி நினைக்கிறீர்கள்? படிப்பறிவு இல்லாத ஒரு சிறுபையன் எத்தனை சுலபமாக என்னை ஏமாற்றிவிட்டான்? அந்த அவமானம்தான் என்னைப் பாடாய்ப் படுத்துகிறது'' என்றாள் தேவிகா.

''அந்தப் பையனை கண்டுபிடிக்க முயற்சி செய்தாயா?'' என்ற கேட்டான் குமரன்.

''இரண்டு, மூன்று நாட்கள் எல்லா வீதிகளையும் சுற்றி ஊர்வலம் வந்துவிட்டேன். கண்ணில் செந்தில் தட்டுப்படவில்லை. பழைய பேப்பர் கடைகளில் சென்று அடையாளம் சொல்லி விசாரித்தேன். தெரியவில்லை என்கிறார்கள். எல்லோரும் கூட்டுக் களவாணிகள்'' என்றாள் தேவிகா.



சிறிது நேரம் யோசித்த குமரன் சொன்னான், ''நாம் ஏமாந்ததற்கு நாம்தான் பொறுப்பு. பிறரைக் களவாணிகள்என்று சொல்வதை விட்டுவிடு. போன மாதம் ஒரு கட்டுரை படித்தேன். ஒருவர் பால்பாயிண்ட் பேனாவில் இருக்கும் ஸ்பிரிங்கை தொலைத்து விட்டுத் தேடு, தேடுஎன்று வெகுநேரம் தேடியும் கிடைக்க-வில்லையாம்''.

''அய்யோ பாவம். அது மிகவும் சின்ன பொருள். கண்ணால் தேடினால் கிடைக்காது. வெள்ளை துணி அல்லது பூந்துடைப்பம் கொண்டு தேடினால் கிடைக்கும். அதுவும் நிச்சயமில்லை'' என்றாள் தேவிகா.

''அவர் பொதுவாக வித்தியாசமான வழிகளில் பிரச்சினை-களைத் தீர்ப்பாராம். அந்த வழிகளின்மூலம் எந்தப் பிரச்சினையும் முழுவதுமாகத் தீருமாம்'' என்றான் குமரன். ''அது என்ன வழி என்று சொல்லுங்களேன், நானும்தான் முயற்சி செய்து பார்க்கிறேன்'' தேவிகாவிடம் ஆர்வம் எழுந்தது.

''உள்ளே போனால் வெளியே இருப்பதைக் காணலாம்'' என்றான் குமரன்.

''இந்தத் திரைக்கதை வசனமெல்லாம் எனக்குச் சரிவராது. நான் என்ன செய்தால் எனக்கு முப்பது ரூபாய் கிடைக்கும்? அதை மட்டும் தத்துவம் எதுவுமில்லாமல் சொல்லுங்கள். எனக்கு நிறைய வேலை இருக்கிறது'' என்றாள் தேவிகா.

''அவர் எழுதியதை எனக்குப் புரிந்த வகையில் சொல்கிறேன். உனக்குப் பிடித்திருந்தால் முயற்சி செய். எந்த விஞ்ஞானியும் தனக்கு உள்ளே இருந்துதான் ஒரு புதிய பொருளை உருவாக்குகிறார். உள்ளே எழுந்த கருத்துகளை திரட்டித் தொகுத்து வெளியே பொருளாக மாற்றுகிறார். அவர் கண்டுபிடிக்கும் அவருக்கு சொந்தமான பொருள் அவருக்குள்ளேயே இருக்கிறது. ஆரம்பம் உள்ளே இருக்கிறது. அவருக்குள்ளே இருந்ததுதான் வெளியே தென்படுவது உருவாகுகிறது'' என்றான் குமரன்.

''சரி, ஒப்புக்கொள்கிறேன்'' என்றாள் தேவிகா.

''அப்படிப் பார்த்தால் உனக்குச் சொந்தமான பொருளும் உனக்குள்ளே இருக்கிறது. உள்ளேபோய் தேடிப்பார்த்தால்,

காணாமல் போன பொருள் கிடைக்கலாம். அதைத்தான் அவர் செய்தார். வெளியே தேடுவதை நிறுத்திவிட்டு, தன்னுள்ளே சென்று தேடினார். யாரோ ஸ்பிரிங்கை எடுத்துக்கொண்டுவந்து அவர் கையில் கொடுத்தாராம்'' என்றான் குமரன்.

''கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் குருவி உட்கார பனங்காய் விழுந்தால் அதையே வழிமுறை ஆக்கிவிடுவதா? சரி, உள்ளே என்றால் மனம் என்று அர்த்தமா?'' என்றாள் தேவிகா.

''அப்படியும் வைத்து கொள்ளலாம். தேடுவது உள்ளே தென்பட்டால் அது வெளியே தானாகவே கிடைத்துவிடும்என்பதை நம்ப வேண்டும். நம்பிக்கை மலையைக்கூட நகர்த்தும். நம்பிக்கை வந்தபின் சிறிது நேரம் கண்களை மூடி, அந்தப் பையனையும், முப்பது ரூபாயையும் உள்ளே தேடித்தான் பாரேன். பனங்காய் விழுகிறதா இல்லையாஎன்று பார்த்துவிடலாம்'' என்ற குமரனுக்கு எப்படியாவது தன் அறிவை தேவிகா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற துடிப்பு வந்துவிட்டது.

''சரி, நீங்கள் சொல்வதால் முயற்சி செய்கிறேன். ஆனால் நான் கண்களை மூடும்போது கிச்சுகிச்சு பண்ணக்கூடாது'' என்று நிபந்தனை விதித்தாள் தேவிகா.

''அதெல்லாம் பண்ணமாட்டேன்'' சிரித்தான் குமரன்.

கண்களை மூடினாள் தேவிகா. 'மாம்பழம் வாங்க வேண்டுமே, கடையை மூடிவிடுவார்களே' என்ற எண்ணம் தோன்றியது.

''தூங்குமுன் உங்கள் யோசனைப்படி முயற்சி செய்கிறேன். இப்போது நான் போய் மாம்பழம் வாங்கிக்கொண்டு வருகிறேன்'' என்று சொன்னாள் தேவிகா. ''என்னிடம் சொன்னால் நான் வாங்கி வருவேனே? எனக்கு அலைச்சல் கொடுக்கக்கூடாது என்று நினைக்காதே'' என்றான் குமரன். ''அப்படி ஒன்றும் நான் நினைக்கவில்லை. நீங்கள் பழம் வாங்கி வந்தால் அது என்ன இலட்சணத்தில் இருக்கும் என்று எனக்குத்தானே தெரியும்'' என்று சிரித்துக்கொண்டே சொன்ன தேவிகா வண்டியைக் கிளப்பினாள்.

வண்டியை நகர்த்தாமல் சிறிது நேரம் சிந்தனை வயப்பட்டாள். 'எப்போதும் அரைவேக்காட்டுத்தனமாகப் பேசும் இவர் இன்று சொன்னதில் ஏதேனும் உண்மை இருக்குமா? பாவம், என்மீது



இருக்கும் அன்பினால்தானே பேசத் தெரியவில்லை என்றாலும் ஏதோ ஒரு விஷயத்தை விளக்க முயற்சி செய்தார்? அந்த அன்பிற்கு ஒரு மரியாதை தர வேண்டாமா?'

கிளப்பிய வண்டியை நிறுத்தினாள் தேவிகா. வண்டியில் அமர்ந்தவண்ணமே கண்களை மூடி மனத்தைப் பார்க்க முயன்றாள். ஒன்றும் புலப்படவில்லை. எல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. இருந்தாலும் செந்திலின் முகத்தையும், முப்பது ரூபாய்களையும் பார்க்க முயன்றாள். முப்பது ரூபாய்களை மனத்தில் கண்டுபிடிக்க முயன்றாள். கலங்கிய நீரில் பிரதிபலிக்கும் சிதைந்த பிம்பங்கள் போல சில தெளிவற்ற உருவங்கள் தோன்றின. அதற்கு மேல் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆனால் மனத்தில் மகிழ்ச்சி எழுந்தது. அது எதனாலோ? புதியது ஒன்றை கற்கும் முயற்சியாலா அல்லது கணவனின் அன்பைப் பற்றிய நினைப்பாலா?

'சரி, இரவு தூங்குமுன் மீண்டும் தேடலைத் தொடரலாம்' என்ற எண்ணத்தோடு வண்டியைக் கிளப்பி, நகர்த்தி, ஓட்டத் தொடங்கினாள் தேவிகா.

தெருமுனையில் தேவிகா கவனமாக வண்டியைத் திருப்பியபோது எதிர்த் திசையிலிருந்து வேகமாக சைக்கிள் ஒன்று வந்தது. பாதை மிகவும் குறுகலானதால், விலக வழி இல்லாமல் இருவரும் வண்டிகளை எதிரெதிரே நிறுத்தினர்.

சைக்கிளை ஓட்டி வந்தவன் செந்தில்.

'வசமாக மாட்டிக்கொண்டோமே' என்ற பதைபதைப்பில் சில விநாடிகள் வார்த்தைகளுக்காகத் தடுமாறிய செந்தில், ''அக்கா, நான் உங்கள் வீட்டுக்குத்தான் வந்து கொண்டிருந்தேன்'' என்றான்.

''அப்படியா?'' சாதாரணமான குரலில் கேட்டாள் தேவிகா.

தன்பொய் பலித்துவிட்டதென்று உற்சாகமானான் செந்தில். ''போன வாரம் சில்லறை மாற்றிக்கொண்டுவர போனபோது சைக்கிள் ரிப்பேராகிவிட்டது. அதனால்தான் அன்றே வந்து முப்பது ரூபாயை கொடுக்க முடியவில்லை'' என்று கூறி, மூன்று பத்து ரூபாய் தாள்களை நீட்டினான்.

அதை வாங்கிக்கொண்ட தேவிகா, ''சந்தோஷம் செந்தில். அடுத்த மாதம் பத்தாம் தேதி மறக்காமல் சில்லறையோடு வந்துவிடு''

என்றாள். ‘‘சரி அக்கா’’ என்றவன், ‘விட்டால் போதும்’ என்று விரைந்து சைக்கிளை ஓட்டி மறைந்தான்.

அவன் சென்ற திசையையே சிறிது நேரம் தேவிகா பார்த்துக் கொண்டிருந்தபோது, பல வருடங்களாக தேவிகாவிற்கு பூ விற்கும் பெண் எதிரே வந்தாள்.

‘‘முப்பது ரூபாய்க்கு ஜாதிமல்லி கொடு’’ என்றாள் தேவிகா. ‘‘எப்போதும் கதம்பம்தானே வாங்குவீர்கள்? ஜாதிமல்லி வாசம் உங்களுக்குப் பிடிக்காதே’’ என்று கேட்டாள் பூக்காரி. ‘‘கல்யாணமான நாளிலிருந்து இன்றைக்குத்தான் உருப்படியான ஒரு யோசனையை என் வீட்டுக்காரர் சொல்லி இருக்கிறார். அதனால் அவருக்கு பிடித்தமான பூவை வாங்குகிறேன்’’ என்றாள் தேவிகா.

பூக்காரி பதில் எதுவும் சொல்லாமல் புன்னகைத்தாள். பக்குவம் நிறைந்தவள். வாழ்க்கையில் முன்னுக்கு வந்துவிடுவாள். அவள் தந்த பூவை வாங்கி கூந்தலில் சூடிக்கொள்ள யத்தனித்த தேவிகா, அதைச் செய்யாமல் பூச்சரத்தை கைப்பையில் வைத்தாள். ‘அவரையே வைத்து விடச் சொல்லலாம். சந்தோஷப்படுவார்’.

மாம்பழத்தை மறந்தாள் தேவிகா. அவள் மனம் குமரனை நோக்கியும், வண்டி வீட்டை நோக்கியும் பறந்தன.

*முற்றும்.*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கடுமையான விரதங்களுக்குப் பதிலாக இனிமையான பண்புகளை ஏற்றுக்கொள்வது நல்லது.

***விரதங்களை விலக்கி, பண்புகளை ஏற்போம்.***





## சமமான லயம் ஞானி, ஞானம், பொருள் என பிரிகிறது (P.140)

சிருஷ்டிக்கு மூலம், ஆதாரம், இரகஸ்யம் அகம் புறமாவது. ரிஷிகள் எப்படி பிரம்மம் உலகமாயிற்றுளனத் தெரியவில்லை. அதைக் கேட்கும் உரிமை நமக்கில்லைஎன்றனர். இது அதிகாரத்தை (authority) ஏற்கும் மனப்பான்மை. ஆராய்ச்சிக்குரியதில்லை. சிறியவன் அறிவு பதவியிலிருப்பவனின் அதிகாரத்தை ஏற்பது. ரிஷிகள் மனத்தால் செயல்பட்டனர். மனத்தின் உச்சக்கட்ட தெய்வீக மனத்தை அடைந்தனர். அதற்கு மேல் சத்தியஜீவியமுள்ளது. இடையில் பொன்மூடி உள்ளது. தெய்வீக மனத்தில் அஞ்ஞானம் உண்டு, அகந்தை உண்டு. இருக்கவேண்டிய அவசியமில்லை. சங்கரர், இராமானுஜர் இருவர் எதிரிலும் ஆண்டவன் சண்டாளனாக எழுந்தருளி அகந்தைக்கு அவர் உட்பட்டிருப்பதைக் காண்பித்தார். சத்தியஜீவியம் இரண்டாகப் பிரியுமிடத்தில் மனம் உற்பத்தியாகிறது. ஆன்மா உற்பத்தி செய்த காலம் மனம் மூலமாக வெளிப்படுவது உலகம், பிரபஞ்சம், சிருஷ்டி. சத்தியஜீவியத்தின் மேற்பகுதி காலத்தைக் கடந்தது. கீழ்ப்பகுதி காலத்தில் செயல்படுவது. மேற்பகுதியில் ஞானி, ஞானம், பொருள் மூன்றும் ஒன்றாக உள்ளது. ஒரு கதையைக் கற்பனை செய்து அனுபவிக்க விரும்புபவர் மனத்தில் கதையுள்ளது, கற்பனையுள்ள, அனுபவிக்கும் ஆனந்தமும் உள்ளது. அதை வெளியிட்டுப் பிரபலமடைய விரும்பினால் வெளியிடுவது ஒரு கம்பனி கையிலும், படிப்பது மக்கள் கையிலும் உண்டு. எழுதியவர் மனத்தில் ஆசையிருக்கிறது. பலன் உலகிலும், அதைச் செயல்படுத்துவது பிரசுரிப்பவர் கையிலும் உண்டு. காலம் அஞ்ஞானத்திலிருந்தால் பலன் மனித வாழ்வு. அஞ்ஞானம் ஞானமாக மாறினால் காலம் மூன்றாம் நிலைக் காலமாக மாறுகிறது. அது அற்புதம்.

ஆசிரியர் தான் எழுதப்போகும் கதையை நினைத்து கற்பனையில் திளைத்தால் கதை, எழுதுவது, அனுபவிப்பது மூன்றும் அவர் மனத்துள் உள்ளது. கதையை ஒரு வெளியீட்டுக் கம்பனி பிரசுரித்தால் பொதுமக்கள் வாங்கிப் படித்து ரசிப்பதால் ஆசிரியர் பிரபலமடைவது கதையின் தரத்தைப் பொறுத்தது. கதை அஞ்ஞானத்தினால் எழுதப்படாமல் ஞானத்தால் எழுதப்பட்டால், ஆசிரியர் கம்பனியை அணுகுவதற்குப் பதிலாக, கம்பனி ஆசிரியரை நாடி கதையைக் கேட்கும். மக்கள் புத்தகத்திற்காகக் காத்திருப்பார்கள். புத்தகம் ஏராளமாக விற்கும். இது அஞ்ஞானமற்ற மூன்றாம் நிலைக் காலம். அஞ்ஞானம் கதையை விட்டுப் போனது போல் பொதுமக்களையும் விட்டுப் போகும். கதையிலுள்ள ஞானமும், கம்பனியிலுள்ள ஞானமும், மக்களிடம் உள்ள ஞானமும் இரண்டறக் கலப்பது வெற்றி, பிரபலம்.

- ❒ மனிதன் அஞ்ஞானத்தால் காலத்தில் வாழ்கிறான்.
- ❒ ரிஷி காலத்தைக் கடந்து ஞானத்தில் வாழ்கிறார்.
- ❒ சத்தியஜீவியம் காலத்தில் வெளிப்படும் ஞானத்தில் மூன்றாம்நிலைக் காலத்தில் வாழ்கிறது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**பிறருக்குச் சிறு அளவுள்ள பெரிய பரிசை மறுக்கும் மனநிலை பூரண சுயநலம் பூர்த்தியான நிலை.**



## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவன் முழுதும் நிறைந்த தியான நிலையைச் செயலில் வெளிப்படுத்துவது எப்படி? பரம்பொருள் பரவெளியில் நிறைந்துள்ளது. அதற்குச் சட்டங்களிலில்லை. சிருஷ்டிக்குச் சட்டம் உண்டு. மனிதனுக்குரிய சட்டங்களை, பண்புகள் என அறிவோம்.

ஒவ்வொரு நிலைக்கும், வேலைக்கும் உரிய பண்புகள் உண்டு. வேலைஎன்பது ஒரு யோசனையாக ஆரம்பிக்கின்றது.

அதை ஒரு கொள்கையாக மாற்றி ஸ்தாபனத்தில் பயன்படுத்துகிறோம்.

கொள்கை அடுத்த கட்டத்தில் திட்டமாகிறது.

திட்டத்தைப் பல பகுதிகளாக்குகின்றோம்.

கம்பெனியின் ஒவ்வொரு பகுதிக்கும் அதற்குரிய திட்டம் போகிறது.

எண்ணம் ஓர் இலட்சியமாகவோ, இலக்காகவோ வெளிப்படுகிறது. ஸ்தாபனத்திற்குரிய நடைமுறைக்குத் தேவையான திட்டமாக இலட்சியத்தை மாற்ற வேண்டும். நிர்வாகத்தின் தேவைக்கேற்ப திட்டத்தைப் பல பகுதிகளாக்க வேண்டும். உற்பத்தி செய்ய, வேலைக்குகந்த பண்புகள் தேவை. தூய்மை, மௌனம், நிஷ்டை ஆகிய யோக முறைகளால் ஜீவன் முழுதும் நிறைந்த தியான நிலையை எய்துகிறோம். பழைய பண்புகளான நிர்வாகத்திற்குரியவை, வேலைக்குரியவை ஆகியவற்றைப் புதிய நிலைகளான மௌனம், தூய்மை, நிஷ்டை ஆகியவற்றைப் பெறும்வகையில் அமைக்க வேண்டும். அதன் மூலம் ஜீவன் நிறைந்த தியான நிலை வேலையில் வெளிப்படும். (உ.ம்.) ஒரு கம்பெனியின் உற்பத்தியை டெலிவரிக்குத் தகுந்தாற்போல் அமைக்க (punctual) நேரத்தில் வேலையை முடிக்க முயல்கிறோம்.

இது டென்ஷனில் முடிகிறது. அதையே சாந்தமாகச் செய்ய முயன்றால் ஜீவன் நிறைந்த தியானம் வெளிப்படும்.

***ஜீவன் நிறைந்த தியானம்என்பது சாந்தமான செயல்.***

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

131. *யானைக்கு அர்ரம், குதிரைக்கு குர்ரம்என்று கூற முடியாது.*

✡ **ஒருவருக்கு சரி வருவது அனைவருக்கும் சரிவாராது.**

132. *சுமங்கலி நல்ல சகுனம்.*

✡ **அன்பர் சுபசகுனம்.**

133. *கொடுக்கல், வாங்கலில் முடியும்.*

✡ **உதவி உபத்திரவம் தரும்.**

134. *ஏட்டுச் சுரைக்காய், கறிக்குதவாது.*

✡ **படிப்பு யோகமாகாது.**

135. *ஆட்டுக்கு வால் அளவோடு வைத்திருக்கிறது.*

✡ **அன்பருக்கு அருள் அளவில்லாமல் செயல்படும்.**

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**வேத ரிஷிகள் பிரம்மத்தைக் கண்டவர்கள். உடலில் ஆன்மாவைப் பூரணமாக உணரும் சித்தி பெற்றவர்கள்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

## ஜீவனுள்ள சிறு செயல் - Small Significant Act

மகாபாரதக் கதையில் போர் ஆரம்பிக்குமுன் அரவானை பலி கொடுத்தனர். இதை நாம் பலியென அறிகிறோம். செயல் பூரணமானது. செயலுக்கு சக்தி முக்கியம். நடைமுறையில் (successive events) அவை தொடர்ந்து வர வேண்டும். தொடர் மாறக்கூடாது. சக்தி முக்கியம்என்பதுபோல் உணர்ச்சி முக்கியம். அதேபோல் செயல் முக்கியம். அமைப்பு முக்கியம். (In an act energy, order, organisation, sequence, relation, correlation, coordination, cooperation, purpose, aim, existence, execution, being, consciousness, ananda, knowledge, force, truth, unity, beauty, love, etc., must be in proportion.) அவை ஒன்றோடொன்று பொருத்தமாக அமைய வேண்டும். பெரிய கம்பனிகளில் ஆட்டோமேட்டிக் மெஷின் அப்படி வேலை செய்யும். அமைப்பு அதுபோலிருந்தால் செயல் இணைந்து அமையும் (an integrated act). *ஒரு குடும்பம் அதுபோல் அமைந்தால் அங்கு முக்கியஸ்தர் என ஒருவர் இருக்கமாட்டார். அனைவரும் முக்கியஸ்தரே.*

நாட்டில் புரட்சி எழுந்தால் அந்தச் சில நாட்களுக்கு நாடு அப்படி அமையும். அந்த நிலையில் தலைவர் செய்யக்கூடியதை கடைநிலையில் உள்ள எவரும் செய்யலாம். ஓர் எலக்ஷன், திருமணம், விழா, பெரிய ஸ்தாபனம் அப்படி செயல்படுவதை விவேகி ஒருவர் அப்படிப் புரிந்துகொண்டால் ஒரு சாதாரண மனிதனை ஓட்டுப் போடச்சொன்னால், அவன் போடும் கட்சி ஜெயிக்கும். செயலின் பாகங்கள் அனைத்தும் ஜீவன் பெற்றுவிட்டதால் எந்தச் சிறுகாரியமும் முடிவான வேலையை முடிக்கும். 1947இல் ஒரு பல்கலைக்கழகத்தில் ஓர் அன்பர் சூழலை இப்படி மாற்றியதால் junior-most கடைசி நிலையிலிருந்து ஆசிரியர் வைஸ்சான்ஸ்லருக்கு சமமாக 1 ஆண்டில் உயர்ந்தார்.

ராயல் ஜெல்லிஎன்பது தேனடையில் ராணி ஈக்கு மற்ற தேனீக்கள் தயார் செய்து தருவது. நாம் சாப்பிட்டால் போஷாக்கு தரும். டயாபடிக்ஸ்ஸை குணப்படுத்தும் முறையில் சொல்லிய 25 வகை உணவுகளில் இதுவும் ஒன்று. டயாபடிக்ஸ் கண்ட்ரோலாக ஒருவர் இதை வாங்கினார். நல்ல தெம்பு உற்பத்தியாவது தெரிந்தது. 4 அல்லது 5 நாட்களுக்குள் 10 வருஷமாக இருந்த பகல் தூக்கம் குறைந்து மறைந்துவிட்டது. 10 வருஷமாக அவரைச் சோதனை செய்யும் டாக்டர் பிரபலமானவர்; சூட்சுமமானவர். அவர் மனதில் இது தோன்றவில்லை.

- சமர்ப்பணமான செயல் இணைந்த செயலாகும் (integrated act).
- உடல்நலத்தை, சமர்ப்பணம் செய்தால் உடல்நலம் இணையும் (integrated health).
- எந்தச் செயலும் பூரணச் செயலாகும் வகையை அறிந்தவர் அம்முழுச் செயலை ஒரு சிறுசெயலால் பூர்த்தி செய்யலாம். ஓர் ஓட்டு எந்தக் கட்சிக்குக் கிடைக்கிறதோ அந்த ஓட்டு எலக்ஷனை வெல்லும்.
- செயலின் முழுமை அறிந்தால் எந்தச் சிறுசெயல்மூலமும் முழுச் செயலையும் பூரணமாகச் சாதிக்கலாம்.

அதை அறிபவர் செயல் ஆரம்பிக்குமுன் செய்வது பலி.

❀❀❀

## பூர்த்தியான அன்பு

அன்னியோன்யமான தம்பதிகள் - கணவன் சிக்கனம், மனைவி வெகுதாராளம். மனைவியை மீறிக் கணவனால் துரும்பும் அசைக்க முடியாது. மனைவியின் அதிகாரம் கணவனுக்கு அவளிடம் நெருக்கம் அளித்தது. கணவன் வெளியூர் போயிருந்தார். ஊர் ஆற்றங்கரையில் உள்ளது. இரயில்வே ஸ்டேஷன் அக்கரையில். ஆற்றில் வெள்ளம் பெருகினால், கடக்கப் பாலமில்லை. தரையோடு சிமெண்ட்ரோடு. அதன் மீது 1 அடிக்கு நீர் உயர்ந்தால் நடந்து கடக்க முடியாது. போலீஸ் எவரையும் ஆற்றில் இறங்க அனுமதிக்காது. கணவன் வெளியூரிலிருந்து திரும்ப வந்தவரால் வீட்டிற்கு வரமுடியவில்லை. அக்கரையிலிருக்கிறார். நீர் வடிய 1 நாளாகும்; சமயத்தில் பல நாட்களுமாகும். 5½ மணிக்குக் காலையில் இரயில் வந்தபின் மனைவி கணவனை 6½ மணிக்கு வீட்டில் எதிர்பார்த்தாள். இரயில்வே ஸ்டேஷன் 2 மைல் தூரத்திலிருப்பதால் 1 மணிக்கு மேலாகாது வீட்டிற்கு வர. 6½ மணிக்கு ஆற்றில் நீர் உயர்வதால் எவரும் ஆற்றைக் கடக்கவில்லை என்ற செய்தி வீட்டிற்கு வந்தவுடன், மனைவிக்கு கணவன் எதிர்க்கரையில் காத்திருப்பது தெரியவந்தது. அத்துடன் வேகம் எழுந்தது.

*அதன்பின் மனைவியால் க்ஷணம் தரிக்க முடியவில்லை.*

கணவன் அக்கரையிலும், தாம் இக்கரையிலும் இருப்பது பொறுக்க முடியவில்லை. ஆவேசத்துடன் எழுந்து வீட்டை விட்டு வேகமாக நடக்க, மாமியார் பின்னால் ஓடினாள். 1 மைல் நடந்து ஆற்றுக்கு வந்தால், போலீஸ் தண்ணீரில் இறங்க அனுமதிக்கவில்லை. வாலிபர்கள் மட்டும் 5, 6 பேர் கைகோத்து நீரில் இறங்கிச் செல்கிறார்கள்.

*போலீஸை மீறி மனைவி நீரோட்டத்தில் இறங்கினார்.*

மாமியார் வயதைப் பாராமல் உடன் இறங்கினார். வேகமாக ஆற்றைக் கடந்தனர். அக்கரையில் கூட்டம் காத்திருக்கிறது. கணவன் கூட்டத்திலிருக்கிறார். மனைவி கணவனை அடைந்துவிட்டார். இருவரும் மீண்டும் ஆற்றைக் கடந்து வீடு திரும்பினர்.

*மனைவியின் தைரியம் அவர் அன்பின் ஆழத்தை அறிவித்தது.*
*கணவன் ஜென்மம் அன்பால் சாபல்யமாயிற்று.*

12 மாதம் கழித்து கணவன் காலமானார். அன்பு பூர்த்தியானபின் உடல் வாழ அவசியமில்லைஎன்பது ஆன்மீக உண்மை. பூர்த்தியான அன்பு பூவுலகை விட்டகலும்.

❀❀❀

February 2010 Jiviyam 15 Malar 10
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

லைப் டிவைன் - கருத்துகள் ரூ.100/-

பரம்பொருள் III ரூ.200/-

எங்கள் குடும்பம் (பாகம் 2) ரூ.250/-

உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் ரூ.100/-

யோக வாழ்க்கை விளக்கம் IV ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

லைப் டிவைன் விரிவுரைகள் ரூ.100/-

*தமிழாக்கம்:* என். அசோகன்

SATYA JYOTHI ரூ.200/-

(CONCISE TRUISMS)

N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191